விலை: 50.00
viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 08 புதன்கிழமை (24.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 340

## நினைவேந்தலை தடுக்க முடியாது

### ஊர்காவற்றுறை நீதிமன்றமும் வழங்கியது தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாள் நினைவேந்தலை தடுக்கமுடியாது என ஊர்காவற்றுறை நீதிமன்றமும் தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் ஊர்காவற்றுறை பொலிஸாரால் 5 நபர்களுக்கு எதிராகவும் நெடுந்தீவு பொலிஸாரால் ஒருவருக்கு எதிராகவும் மாவீரர் நினைவேந்தலை அனுஷ்டிக்க தடை உத்தரவை பிறப்பிக்க கோரி மனுவை தாக்கல் செய்தனர்.

இதன் போது பிரதிவாதிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா, கனகரட்ணம் சுகாஸ் உள்ளிட்ட சில சட்டத்தரணிகள் ஆஜராகி தடை உத்தரவை பிறப்பிக்க கூடாதென வாதம் செய்த 15

## புன்னாலைக்கட்டுவன் வடக்கில் மின்குமிழை ஒளிரவிட சென்றவர் விபத்தில் மரணம்

(யாழ்ப்பாணம்)

மின்கம்பத்திலுள்ள மின்குமிழை ஒளிரவிடச் சென்றவர் மோட்டார் சைக்கிள் மோதியதில் உயிரிழந்துள்ளார்.

இதில் புன்னாலைக்கட்டுவன் வடக்கைச் சேர்ந்த சிவலிங்கம் சிவனேஸ்வரன் (வயது-70) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த வயோதிபர் நேற்று முன்தினம் தனது வீட்டுக்கருகிலுள்ள மின்கம்பத்தில் மின்குமிழை 15

## பாசையூரைச் சேர்ந்த மீனவர் கிளி.கௌதாரிமுனையில் நேற்று சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பாசையூரை சேர்ந்த மீனவர் ஒருவர் கிளிநொச்சி கௌதாரிமுனை பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் புதிய அந்தோனியார் வீதியைச் சேர்ந்த டன்சன் கனிராஜ் ( வயது - 42) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சி மாவட்டபதில் நீதவானின் விசா 15

## கொரோனா 24 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றினால் நாட்டில் மேலும் 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய, நாட் 15

## தீயில் எரிந்த இளம் குடும்பப் பெண் மரணம் வவுனிக்குளத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தீயில் எரிந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கொள்ளவிளான்குளம்வவுனிக் 15

## வடக்கில் கன மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணம் உட்பட நாட்டின் பல பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. 15

## சாவகச்சேரியில் வாள்வெட்டு ஒருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-கச்சாய் வீதிப் பகுதியில் நேற்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். 15

# கிண்ணியாவில் மிதப்பு பாலம் உடைந்து கவிழ்ந்தது

## 8 மாணவர்கள் உட்பட 10 பேர் பலி

## திருகோணமலையில் சோகம்





*(திருகோணமலை)*

திருகோணமலை கிண்ணியா குறிஞ்சாக்கேணிப் பகுதியில் மிதப்பு பாலம் உடைந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 8 மாணவர்கள் உட்பட 10 பேர் உயிரிழந்தது பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

*(15 ஆம் பக்கம் பார்க்க)*

## கிண்ணியா விபத்து திட்டமிட்ட கொலை

### சபையில் அமைச்சர் ஜோன்ஸ்டன்

(திருகோணமலை)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு சேவையில் சிறுவர்களை அழைத்து செல்லும் வேளையில் உயிர்ப் பாதுகாப்பு கவசங்களை பயன்படுத்தவில்லை. இது சட்டவிரோதமான செயற்பாடு மட்டுமல்ல நாட் 15

## மட்டுவிலில் பிறந்த சிசுவை உயிருடன் புதைக்க முயற்சி

### அயலவர்களால் சிசு பத்திரமாக மீட்பு
### தாய், பேர்த்தி கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். மட்டுவில் பகுதியில் பச்சிளம் குழந்தையை உயிருடன் புதைக்க முயன்ற குற்றச்சாட்டில் குழந்தையின் தாயான 18 வயதான பெண்ணும் அவருடைய தாயாரும் கைது செய்யப்பட்டுள்ளனர். 15

## புதிய அரசியலமைப்பை அரசு உருவாக்குமென்ற நம்பிக்கையில்லை

### ஐ.நா உதவிப் பொதுச் செயலாளரிடம் கூட்டமைப்பு எடுத்துரைப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை ராஜபக்ஷ அரசாங்கம் உருவாக்கும் என்ற நம்பிக்கை இல்லை என ஐ.நா உதவிப் பொதுச் செயலாளரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துரைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் பசுபிக் நாடுகளுக்கான அரசியல் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் விவகாரங்கள் திணைக்களத்தின் உதவிப் பொதுச் செயலாளர் காலித் கியாக்கும், தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இரா. சம்பந்தன், 15

# மரண அறிவித்தல்



# சரவணமுத்து அருளானந்தம்

(ஓய்வுபெற்ற முகாமையாளர் - புதுக்குடியிருப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் )

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05.05.1938 | 21.11.2021 |

யாழ்.கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு உடையார்கட்டு வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து அருளானந்தம் அவர்கள் கடந்த (21.11.2021) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - சின்னாச்சி தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற நாகலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும் இந்திராணி அவர்களின் அன்புக் கணவரும் சாந்தினி, சாந்தகுமார், சந்திரகுமார், ராஜினி, சசிகுமார், சிவகுமார், சிவாஜினி, சுரேஷ் குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகரத்தினம், சிவகௌரி, சரஸ்வதி, குணபாலா, சிவாஜினி, சிராணி, சுபாகரன், கார்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும் நிவேதா, துஷானி, ஐதுஷன், அபிநயா, மிதுஷன், தனுஷன், டினோஜன், நர்மிகா, விதுஷன், ரிஷாந்தன், தர்மிகா, சிரோன், சரன், சாருனி, சுருதி, சுவஸ்தி, சிமித்தி ஆகியோரின் அன்புப் பேரனும் நிறா, தேவ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் காலஞ் சென்றவர்களான நாகரத்தினம், நாகம்மா, அன்னம்மா, பாக்கியம், தெய்வானைப் பிள்ளை மற்றும் தேவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர் களான சிங்கராசா, செல்வராசா மற்றும் தர்மராசா, சண்முகராசா, பூமணி, சிரோன் மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (25.11.2021) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுதந்திரபுரம் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ள வும்.

புதுக்குடியிருப்பு,
உடையார்கட்டு வடக்கு, முல்லைத்தீவு.

(C-3079)

*தகவல்:* சசிகுமார் (மகன்) தொ.பே: +94771185241
ராஜினி (மகள்) தொ.பே: +94779423121

# தடைகளைத் தகர்த்து

## மாவீரர்களை நினைவுகூருவோம்

(யாழ்ப்பாணம்)

**நவம்பர் 27 இல் மாவீரர்களை நினைவுகூருவது நமது கடமையாகும். இதற்கு அரசியல்வாதிகளும் அரசியல் பிரதிநிதிகளும் முன்னின்று செயற்பட வேண்டுமென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.**



நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"மாவீரர் நாளை அனுஷ்டிப்பது தொடர்பாக இலங்கை அரசு, பொலிஸார் ஊடாகவும் படையினர் ஊடாகவும் நீதிமன்றங்களை அணுகி, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தடைகளை ஏற்படுத்தி வருகின்றது.

தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை நினைவுகூர முற்படுகின்றனர் எனக் கூறி, நீதிமன்றங்களில் எமக்கான தடை உத்தரவுகளை பெற்றிருக்கிறார்கள். சில நீதிமன்றங்கள் தடை உத்தரவுகளை பிறப்பிக்க மறுப்பு தெரிவித்து இருக்கின்றன.

மேலும், மாவீரர் துயிலுமில்லங்கள் தற்போது இராணுவ முற்றுகைக்குள் காணப்படுகிறது.

எனவே அரசியல் செயற்பாட்டாளர்களும் அரசியல் பிரதிநிதிகளும் இதில் மௌனமாக இருக்காது, துணிந்து பொது இடங்களிலும் ஆலயங்களிலும் அஞ்சலியை செய்ய முன்வர வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி-33)

# படகு விபத்தை அடுத்து பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டை தாக்கிய மக்கள்

## கிண்ணியாவில் பதற்றம்



(திருமலை)

திருகோணமலை - கிண்ணியா பகுதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட படகு விபத்தில் பலர் உயிரிழந்த நிலையில் ஆத்திரமடைந்த பிரதேசவாசிகள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் வீட்டின் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிண்ணியாவில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் சில இளைஞர்கள் அடாவடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால் அங்கு பதற்றமான சூழல் தொடர்கிறது. (நி)

# கோப்பாய் துயிலும் இல்லம் முன் குழப்பம்

(யாழ்ப்பாணம்)





யாழ்ப்பாணம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாக துப்புரவு பணியில் ஈடுபடுகிறவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் நடந்து கொண்டுள்ளனர்.

கோப்பாய் துயிலும் இல்லத்தை இராணுவத்தினர் இடித்தழித்து, பாரிய இராணுவ முகாமை அமைத்து நிலை கொண்டுள்ளனர். அதனால் துயிலும் இல்லத்திற்கு முன்பாக உள்ள தனியார் காணியில் மாவீரர் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுவது வழமையாகும்.

தற்போது மாவீரர் வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில் அக்காணியின் முன்பக்கமாக வீதியின் இருமருங்கினையும் துப்புரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்போது, பொலிஸார் மற்றும் பெருமளவான இராணுவத்தினர் அப்பகுதியில் குவிக்கப்பட்டனர்.

அதேவேளை இராணுவம் மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்கள், அங்கிருந்த ஊடகவியலாளர்கள் உள்ளிட்டவர்களை அச்சுறுத்தும் விதமாக புகைப்படம் எடுத்ததுடன் வாகன இலக்கங்களையும் பதிவு செய்தனர். (நி-33-18)

# துயிலும் இல்லங்களுக்கு முன்னால் படைகளை குவிப்பது ஏன்?

## பாராளுமன்றில் சிறிதரன் எம்.பி.கேள்வி

(கொழும்பு)

மாவீரர் வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில், வடக்கு, கிழக்கில் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு முன்பாக படையினர் குவிக்கப்பட்டுள்ளமை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றில் இடம்பெற்று வரும் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் நேற்றுக் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இந்த விடயம் குறித்து கேள்வி எழுப்பினார்.

மாவீரர் வாரம் ஆரம்பிக்கப்பட்டவுடன், மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு முன்பாக இவ்வாறு படையினரை குவித்து, மாவீரர் துயிலும் இல்லங்களை மறைப்பதன் மூலம், தமிழர்கள் அவர்களின் வீரப்புதல்வர்களை மறக்கக்கூடிய சூழ்நிலை வருமா? என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

2016 - 2018 வரை மட்டுமன்றி 2019 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னரும் கூட மாவீரர் தினம் விளக்கேற்றி அனுஷ்டிக்கப்பட்டது என்றும் தெரிவித்த அவர், தற்போதுதான் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக குற்றம் சாட்டினார்.

நாட்டில் விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன என்றும் இதற்கு கொரோனா கட்டுப்பாடுகள் இல்லை என்றும் தெரிவித்த அவர், மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு மட்டுமே கொரோனா கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன இந்த நிலை மாற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# தடுப்பூசியின் மூன்றாவது அலகு வழங்கல் ஆரம்பம்

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கும் அதிக ஆபத்துள்ள நோய் நிலைமையுடைய 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கொவிட்-19 தடுப்பூசியின் மூன்றாவது அலகு வழங்கல் வடக்கு மாகாணத்தில் இவ்வாரம் ஆரம்பிக்கப்பட உள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட நோய் நிலைமையுடைய 20 வயதுக்கு மேற்பட்டவர்களில் ஏற்கனவே சினோபார்ம் கொவிட்-19 தடுப்பூசியின் இரண்டாவது அலகைப் பெற்றுக்கொண்டவர்கள் அத்தடுப்பூசியைப் பெற்ற நாளிலிருந்து ஆகக்குறைந்து ஒரு மாத இடைவெளியின் பின் இத் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளலாம்.

சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு பிரிவின் வழிகாட்டல்களுக்கு அமைவாக வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆதார மருத்துவமனைகளிலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட பொது மருத்துவமனைகளிலும் இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்பட உள்ளன.

நோய் நிலைமையால் அல்லது அதற்கு பெற்றுக்கொண்ட சிகிச்சையினால் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள், நாட்பட்ட சிறுநீரக நோயுடையவர்கள், உறுப்பு மாற்று (உதாரணமாக சிறுநீரகம், ஈரல் மற்றும் சுவாசப்பை) மற்றும் என்பு மச்சை மாற்று சத்திர சிகிச்சைக்கு உட்பட்டவர்கள்,

புற்றுநோயுடையவர்கள், மண்ணீரல் தொழிற்பாடு குறைந்தவர்கள் அல்லது நோய் நிலையின் நிமித்தம் மண்ணீரல் அகற்றப்பட்டவர்கள், மருத்துவரினால் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களென பரிந்துரைக்கப்பட்டவர்கள் மூன்றாவது தடுப்பூசி பெற்றுக்கொள்ள முன்னுரிமை உடையவர்கள் ஆவர்.

எனவே, மேற்குறிப்பிட்ட தேவையுடையவர்கள் ஏற்கனவே தடுப்பூசி ஏற்றப்பட்ட அட்டை மற்றும் மருத்துவ அறிக்கையுடன் தமக்கருகிலுள்ள குறிப்பிடப்பட்ட மருத்துவமனைகளில் இம்மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார். (நி-33-60)

# அறிவித்தல்

## வலி. தென்மேற்கு பிரதேச சபை
## மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை

**வட்டாரம் : 14**
**ஆதன இலக்கம் : 9/5**
**உடுவில் வீதி.**

வட்டாரம் 14, உடுவில் வீதி, ஆதன இலக்கம் 9/5 இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று ஆனைக்கோட்டை இறை "பத்தாவத்தை" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் Lot 2 நிலப்பரப்பு 1 குளி 13.10 கொண்ட இவ்வாதனமானது சீரணி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த பரமேஸ்வரன் குமுதனும் பெண் அஜந்தினியும் ஆகிய இவர்களால் அவ்வூர் கதிரவேலு சண்முகலிங்கம் கைம்பெண் யோகேஸ்வரி இவர்களுக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு.வசந்தசேனன் சிவானி முகதாவில் நிறைவேறிய 671 ஆம் இலக்க 2020.10.06 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த ஆதனமானது 'தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். இவ்வாதனத்தின் தாயுறுதியானது பிரசித்த நொத்தாரிசு செல்வி.ஞானலோஜினி சிவஞானம் முகதாவில் நிறைவேறிய 4829ஆம் இலக்க 2010.10.01 ஆம் திகதிய அறுதி உறுதியின் மூலம் பொன்னம்பலம் மகள் அஜந்தினிக்கு வந்தடைந்ததாகும். நில அளவையாளர் திரு.N.இராமசந்திரன் அவர்களால் வரையப்பட்ட 3812 ஆம் இலக்க 2010.08.28 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் "பத்தாவத்தை" Lot 2 நிலப்பரப்பு 1 குளி 13.09 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து கதிரவேலு சண்முகலிங்கம் கைம்பெண் யோகேஸ்வரி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை (மானிப்பாய்) பொறுப்பாளி ஆகாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(8763)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திரு.தம்பித்துரை பகீரதராஜ்
அவர்களின் அன்புச் சகோதரன்

அமரர் **தம்பித்துரை சஞ்சீபராஜ்**

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் எமது ஆசிரியருக்கும் அவரது குடும்ப உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்**

(8761)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

# மரண அறிவித்தல்



## உருத்திராதேவி பரமானந்தன்

பிறப்பு : 1956.06.18 இறப்பு: 2021.11.23

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட உருத்திராதேவி பரமானந்தம் நேற்று *(23.11.2021)* செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முத்தையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பரமானந்தம் அவர்களின் அன்புக் கணவரும் விமல்றாஜ், யசோதா, றமேஸ், சதீஸ், காலஞ்சென்ற கிருபன் மற்றும் கமல்றாஜ், சிவனேஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவருடைய இல்லத்தில் இடம்பெற்று இன்று *(24.11.2021)* புதன்கிழமை தகனக் கிரியைகளுக்காக பி.ப 2 மணியளவில் கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அரசடி வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். **077 271 9823** (8763) தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் கணேசபிள்ளை



**தோற்றம் : 1937.08.10 மறைவு : 23.11.2021**

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும் கலாசாலை வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் கணேசபிள்ளை நேற்று *(23.11.2021)* செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற கனகமாணிக்கம் - நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகலட்சுமியின் அன்புக் கணவரும் மகேஸ்வரன், காலஞ்சென்ற மகாலிங்கம், பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயகௌரி(லண்டன்), காலஞ்சென்ற பிரியதர்சினி, நளாயினி (ஆசிரியர் - கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுமார் (பொறியியலாளர் - லண்டன்), புஸ்பராஜா (மருத்துவர் - கிளிநொச்சி), ஆனந்தசெந்தூரன் (Physiotherapy, திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் கபிலன், சங்கவி, காயத்திரி, துர்க்கா, சாய்பிரியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பழங்கிணற்றுப் பிள்ளையார் கோவிலடி, கலாசாலை வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நாளை *(25.11.2021)* வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் முற்பகல் *10.30* மணியளவில் தகனக் கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(8762)

கலாசாலை வீதி,
திருநெல்வேலி. 077 404 6648 தகவல் : குடும்பத்தினர்

# இராசிபலன்

24.11.2021
கார்த்திகை 08,புதன் கிழமை.
பஞ்சமி நள்ளிரவு 11.59 மணிவரை
புனர்பூசம் பிற்பகல் 2.30 மணிவரை
சுபநேரம் -4.41-6.11 மணிவரை
இராகுகாலம் -12.11-1.41 மணிவரை
சந்திராஷ்டமம்: மூலம், பூராடம்

வளவன்



மேஷம்

புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சிந்தனை ஆற்றலால் சிறப்ப டைவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.



ரிஷபம்

நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் புதிவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.



மிதுனம்

நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள் ,வழிபாடு காரிய வெற்றிதரும், அதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.



கடகம்

கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, பயணங்களால் பலனுண்டு, உடல் நலனில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



சிம்மம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள், மனச் சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும், சயனசுகம்-குறைவான நாள்.



கன்னி

செல்வ நிலை உயரும் நாள், வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.



துலாம்

முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெற லாம்,செய்தொழில் மேன்மையுண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.



விருச்சிகம்

சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும்.



தனுசு

கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



மகரம்

விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், எதிர்பா ர்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்பு ண்டு.



கும்பம்

மறைமுகப் போட்டிகள் மாறும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.



மீனம்

தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அக்கறை கூடும்.

அறியாமை தான் துன்பங்கள் அனைத்திற்கும் காரணம்

# ஒன்பது மாகாணங்களிலும் தாக்குதல் நடத்தத்திட்டம்

## விசாரணையில் அதிர்ச்சித் தகவல்

**(கொழும்பு)**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் சூத்திரதாரி என அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட நௌபர் மௌலவி இந்த ஆண்டு நாட்டின் ஒன்பது மாகா ணங்களிலும் தாக்குதல்களை நடத்த திட்டமிட்டி ருந்ததாக தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறு வனத் தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் றொஹான் குணரத்ன ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரி வித்தார்.**

தலைமைத்துவ பிரச்சினை காரண மாக இத் தாக்குதல் திட்டமிட்டபடி நடக்க முடியாமல் போனமை விசாரணைகளில் தெரியவந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

நௌபர் தற்போது காவலில் உள்ளார் என்றும் விரைவில் இந்த விடயம் குறி த்து விசாரணை நடத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் இஸ்லாமிய அரசை விரிவுபடுத்துவதற்கும் ஒன்பது மாகா ணங்களிலும் தாக்குதல்களை நடத் துவதற்கும் நௌபர் மௌலவி சித்தாந்தம் கொண்டிருந்ததாகவும், ஆனால் உடன டியாக தாக்குதல் நடத்த விரும்பிய சஹ்ரா னுடன் சர்ச்சையை எதிர்கொண்டதாக வும் தெரிவித்த அவர், அவரகளின் அணுகுமுறைகள் வேறுபட்டவை என் றும் தெரிவித்தார்.அத்துடன் இரண்டாம் அலை தாக் குதல்கள் அதிக உயிரிழப்பை ஏற்படுத்தி யிருக்கும் என்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குழுவைவிட இரண்டா வது தாக்குதல் குழு பெரியதாக



இருந்ததா கவும் றொஹான் குணரத்ன தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து, தாக்குதலுடன் தொடர்புடைய அனைவரையும் பொலிஸார் கைது செய் துள்ளதாகவும், இரண்டாவது தாக்குதல் அலையைத் திட்டமிட்ட அனைவரையும் கைது செய்துள்ளதுடன் மேலும் தாக்கு தல்களை விரும்பாத முஸ்லிம் சமூக த்தினரே சந்தேக நபர்களுக்கு எதிரான பெரும்பாலான தகவல்களை வழங்கி யதாகவும் பேராசிரியர் குணரத்ன தெரி வித்தார். (நி)


## காணி விற்பனைக்கு

பலாலி - யாழ்ப்பாணம் வீதியில் புன்னாலைக்கட்டுவன் வட க்குச் சந்தியில் இருந்து வடக்குப் பக்கமாக 500 மீற்றர் தூர த்தில் பிரதான வீதியின் மேற்குப் பக்கமாக உள்ள வீதியில் 4 ஆம் காணி 7 பரப்பு உடன் விற்பனைக்கு உண்டு. (876)

நேரடித் தொடர்பு:- 076 999 2016 | 077 323 7891

## பணி நயப்பு வாழ்த்தும் மணிவிழா வாழ்த்தும்

திருமதி. கலாமதி
கமலேந்திரன்
ஆசிரியர்
(யா/ கோண்டாவில் றோ.க.த.க.பாடசாலை)



சேவை விபரம்
யா/நாவாந்துறை றோ.க.த.க.பாடசாலை
26.03.1990-31.05.1996
யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
01.06.1996-31.12.2001
யா/ உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்
01.01.2002-31.12.2003
யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்
01.01.2004-31.12.2013
யா/ ஊரெழு கணேச வித்தியாலயம்
01.01.2014- 25.02.2014
யா/ கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலை
26.02.2014- 24.11.2021

எமது பாடசாலை ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்று 60வது பிறந்த நாள் காணும் ஆசிரியர் அவர்கள் நோய் நொடிகள் இன்றி பல்லாண்டு காலம் குடும்பத்தினருடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம். [8749]

பாடசாலைச் சமூகம்
யா/ கோண்டாவில் றோ.க.த.க. பாடசாலை

# யாழில் கோர விபத்து மாணவி உட்பட இருவர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

தாவடிப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பாடசாலை மாணவி உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர். இந்த விபத்து நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

யாழ்ப்பாணம் - தாவடி சந்தியில் இலக்கத் தகடு அற்ற பேருந்து மோதியதில் பாடசாலை மாணவி உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவி பயணித்த மோட்டார் சைக்கிள் மீதே பேருந்து மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. தந்தையும் மகளுமே இந்த விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (4-5-18-33-104)



யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனா தொற்று மற்றும் டெங்கு ஒழிப்பு தொடர்பாக ஆராய்வதற்காக மாவட்ட கொரோனா தடுப்பு செயலணியின் கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், 51ஆவது பிரிவின் இராணுவத் தளபதி சந்தன விக்ரமசிங்க ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படம்: சிவசாந்தன்)

# விபத்து; ஒருவர் காயம்



(அராலி)

யாழ்ப்பாணம் - மல்லாகம் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லாகம் சந்தியில் பட்டா ரக வாகனம் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகின.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பன்னாலையைச் சேர்ந்த 37 வயதுடைய இரத்தினசிங்கம் ராசகாந்தன் என்பவரே காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-104)

# நாவலர் குருபூஜை

(யாழ்ப்பாணம்)

குப்பிழான் சொக்கவளவு அருள்மிகு அங்கயற்கண்ணி உடனாய திருவாலவாயார் திருக்கோவிலில் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.30 மணியளவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூஜை இடம்பெறவுள்ளது. (4-5)

# பகிரங்க ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் நீதிமன்ற வளாகத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலத்தில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களைக் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏலத்தில் வாகனங்களைக் கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும்.

அத்துடன் ஏல விற்பனையில் பெற்றுக்கொள்ளும் வாகனங்களை அன்றையதினமே உடனடியாக வளாகத்திலிருந்து அகற்றவேண்டும் என யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (4-5)

# ஆலயத்தின் அறை உடைத்து திருட்டு

(சாவகச்சேரி)

மீசாலை வடக்கு பகுதியில் அமைந்துள்ள இராமாவில் ஆலயத்தின் அறை ஒன்றை உடைத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு மூன்று இலட்சம் பணம் மற்றும் பொருட்கள் திருடப்பட்டன.

நள்ளிரவு 12.30மணியளவில் ஆலய வளாகத்திற்குள் நுழைந்த இருவர் அங்கிருந்த அறை ஒன்றினை உடைத்து மூன்று இலட்சம் பணம், அரிசி, தேங்காய் ,எண்ணெய் உள்ளிட்டவற்றை திருடிச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-30)

# வலி.மேற்கு பிரதேச சபை பாதீடு நிறைவேற்றம்

(அராலி)

வலி. மேற்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற் கான பாதீடானது 18 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

வலி.மேற்கு - சுழிபுரம் பிரதேச சபையின் வரவு- செலவுத் திட்ட முன்மொழிவுகள் தவிசாளர் த. நடனேந்திரனால் சபையில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

இதனையடுத்து பாதீடு வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 18 மேலதிக வாக்குகளால் வரவு- செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. (5-4-33-104)

# ‘புகையிலை இராணி’ ஆய்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தினால் வருடாந்தம் இம்முறை வெளியிடப்படும் புலமைச் சஞ்சிகையான. தென்னாசிய கற்கைகளுக்கான இலங்கை ஆய்வுச் சஞ்சிகை யானது இன்று 24ஆம் திகதி புதன்கிழமை மாலை 2.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் புகையிலை இராணி (1784-1844) எனும் தலைப்பில் ஆய்வுக் கருத்தரங்கொன்றை ஒழுங்கு செய்துள்ளது. கனடா ஸ்காபுரோ பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் கலாநிதி மார்க் ஈ. பாம்போத் (**Dr. Mark E.Balm forth**) என்பவரால் இவ் உரை நிகழ்த்தப்படவுள்ளது.

எனவே ஆய்வு மாணவர்கள், புலமையாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் இதில் கலந்து கொள்ளமுடியுமென யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை அறிவித்துள்ளது. (4-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 330 | 360 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 140 | 180 | 240 |
| தக்காளி | 400 | 360 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | 200 | 350 | 320 |
| கரட் | 300 | 340 | 450 |
| பூசணி | 50 | 50 | 60 |
| புடோல் | 240 | 180 | 240 |
| வாழைக்காய் | 60 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 210 | 180 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 140 | 150 |
| பாகற்காய் | 600 | 550 | 800 |
| வெண்டிக்காய் | 240 | 180 | 280 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 160 |
| பயற்றங்காய் | 440 | 280 | 400 |
| லீக்ஸ் | 350 | 340 | 450 |
| பீற்றூட் | 120 | 100 | 200 |
| கறிமிளகாய் | 550 | 500 | 450 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 600 |
| போஞ்சி | 320 | 380 | 400 |
| கத்தரிதம்புள்ள | 280 | -- | 360 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 400 | 360 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 85 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 260 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 450 | -- | 400 |
| முள்ளங்கி | 160 | 140 | 240 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 50 |
| வல்லாரை | 200 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | 60 | 120 |

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர்

# திரு. கனகர் இரத்தினம் கமலநாதன்

## அவர்களின் மணிவிழா வாழ்த்து



### யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அவர்களின் வாழ்த்துச் செய்தி

திரு. கே. ஆர். கமலநாதன் அவர்களின் மணி விழா நிகழ்வில் வாழ்த்து வழங்குவதையிட்டு பேருவகை அடைகின்றேன். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பூத்த கமலங்களில் இளைய கமலம்தான் கே.ஆர். கமலநாதன் அவர்கள். கணீரென்ற குரல், மலர்ச்சியான முகம், இளமையான தோற்றம், நாடக பாணியிலமைந்த பேச்சு, நிமிர்ந்த நடை, இவைதான் கமலநாதனின் குறியீடு. ஒளிவு மறைவின்றி நேரடியாகப் பேசும் ஆற்றல் மிக்க இவரைக் கமலநாதன் என்பதனை விடவும் கமலநாதம் என்றால் மிகவும் பொருத்தமாக இருக்கும். ஏனெனில் நாதமும் அதாவது இசையும் இவருடன் மிகவும் இணைந்து பயணிக்கும். நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கு மேலாக தமிழ், ஆரம்பக்கல்வி மற்றும் தொழிற்கல்விப் பாடங்கள் இவருக்கு கைவந்த கலைகளாக அமைந்திருக்கின்றன.

கல்வியியற் கல்லூரியின் எந்தவொரு நிகழ்ச்சியும் இவருடைய நாடகமொன்றோ, பங்களிப்போ இல்லாமல் நடைபெற்றதில்லை. பல வேளைகளில் இரவிரவாக மாணவ, ஆசிரியர்களுடன் நாடகத் தயாரிப்பில் ஈடுபட்டிருப்பது சகலருமறிந்ததொன்று.

இவரின் இன்னோர் சிறப்பு என்னவென்றால், தனது குடும்பத்தினையும் அளவுக்கு அதிகமாக நேசித்து வருதலாகும். அதேவேளை அண்மைக்கால அவரின் விரிவெழுகை நிகழ்ச்சிகள் அனைத்திலும் தன்குடும்ப உறுப்பினர்களையும் நிகழ்ச்சிகளில் பங்காளர்களாகவும், பார்வையாளர்களாகவும் உள்வாங்கியவர். தன் மனைவி, பிள்ளைகளிற்கான கடமைகள் அனைத்தையும் செவ்வனே நிறைவேற்றி வருகின்றவர்.

இவருடைய பணி எமது சமூகத்திற்கு இன்னும் இன்னும் தேவை என்பதனையும் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். இவருயை ஓய்வுக்காலம் மிகவும் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல இறையாசியை வேண்டி பீடாதிபதி என்ற வகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தின் சார்பிலும் எனது குடும்பத்தின் சார்பிலும் வாழ்த்தி அமைகின்றேன்.

**சுப்பிரமணியம் பரமானந்தம்,**
**பீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,**
**யாழ்ப்பாணம், கோப்பாய்.**



### யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி(நிதி நிர்வாகம்) திரு.தி.ஜெயகாண்டீபன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

எங்கள் அன்புக்குரிய கே.ஆர்.கமலநாதன் சேர் அவர்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதுபெரும் சொத்து எனலாம்.

கே.ஆர். கமலநாதன் சேர் என்றால் எமக்கு ஞாபகம் வருவது அவரது பக்திபூர்வமான புன்னகை பூத்த முகம், எப்பொழுதும் எவரிடமும் நேர்மனப்பாங்குடன், மகிழ்வுடன் பழகும் தன்மை, மிகுந்த நகைச்சுவை உணர்வு என்பனவாகும். ஓர் கலைஞனாக கலைத்துவம் ஊறிய அவரது வாழ்க்கைப் பாங்கின் மூலமே இவ்வியல்பு அவருக்கு கிடைத்தது என்பது வெள்ளிடைமலை.

கற்பித்தல் என்ற உன்னத பணியை மாணவர் விரும்பக் கூடிய வகையில் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் இனிமையினால் மெருகூட்டி தன் ஆசிரியப் பணியினை எல்லோரும் வியப்புடன் நோக்கும் வகையில் ஆற்றிய பெருந்தகை கமலநாதன் சேர்.

அழகியல் வகிபாகத்துக்கப்பால் ஓர் எழுத்தாளனாக பரிணமித்து தேசிய விருதுகளையும் தனதாக்கி தனது புலமையை வெளிப்படுத்தியுள்ளார் கமலநாதன் சேர். குறும்படங்கள் , தனிநடிப்பு என்று பல்வேறு தற்றிறன்களை வெளிப்படுத்தி அவற்றின் மூலம் சமூகத்திற்கு யாதேனும் ஓர் நற்செய்தியை எப்பொழுதும் நாசூக்காக எடுத்தியம்பும் அவரது கலைப்பாணி அவரது சமூகப்பொறுப்பையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

அவர் வயதின் காரணமாக பணிமகிழ்ந்து ஓய்வுபெறினும் அவரது உன்னத சேவை எப்பொழுதும் எங்களுக்கு கிடைக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அவர் தம் குடும்பத்துடன் சீரும் சிறப்புமாக வாழ வித்தக விநாயகனையும் முடிமன்னர் வைரவரையும் வேண்டுகிறேன். அவரது ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

**தி.ஜெயகாண்டீபன்,**
**உபபீடாதிபதி (நிதி நிர்வாகம்),**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**



### பல்துறை ஆற்றல் மிக்க கல்வியியலாளர்


யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நாடகத்துறை, ஆரம்பக் கல்வித்துறையில் இருபது வருடங்களுக்கு மேலாக விரிவுரையாளராக பணியாற்றி தமது அர்ப்பணிப்புடனான உன்னத சேவையினை கல்லூரிக்கு நல்கிய திரு. க.இ.கமலநாதன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

திரு.க.இ.கமலநாதன் அவர்கள் ஒரு சிறந்த நடிகராக மட்டுமன்றி கவிஞராக, பாடகராக, வாத்தியக் கலைஞராக பல துறைகளில் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி மாணவ ஆசிரியர்களுக்கு சிறந்த முன்மாதிரியாக கல்லூரியில் தடம்பதித்த சிறந்த ஆளுமை மிக்க கல்வியியலாளர் ஆவார்.

அவரது அன்பான, ஆதரவான பேச்சு, நகைச்சுவை உணர்வு, மாணவ ஆசிரியர்கள்பால் அவர் காட்டும் அக்கறை, அவர்களது தேவை அறிந்து ஒரு தந்தை போல் அவர்களுக்கு உதவும் பண்பு காரணமாக மாணவ ஆசிரியர்களது மனதில் நீங்காத இடம்பிடித்த கல்வியியலாளர்.

திரு.க.இ. கமலநாதன் அவர்கள் தமது அறுபதாவது அகவையில் மணிவிழா மூலம் கௌரவிக்கப்படுவது சாலப்பொருந்துவதாகும். அவர்தம் ஓய்வுநிலை வாழ்வில் சகல செல்வங்களும் பெற்று நிறைவான வாழ்வு வாழவேண்டும் எனவும், அவரின் கல்விச் சேவை தொடர வேண்டும் எனவும் எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டி அவரை வாழ்த்துகிறேன்.

**செல்வி.செ.செல்வமலர்,**
**உப பீடாதிபதி (கல்வியும் தர மேம்பாடும்),**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**



## Mr.K.R.Kamalanathan

**Senior Lecturer**

**B.A., M.A., M.Ed., Primary Trained , Dip.In.Education**

**நாடகக் கலாவித்தகர்**

K/Pussalawa Saraswathy M.V.
05.07.1985 – 26.02.1989
Kopay Teachers' Training College
27.02.1989 – 31.12.1990
J/Kaithady Navatkuly GTMS
01.01.1991 – 19.05.1996
Kili/Kalmadunagar
20.05.1996 – 31.08.1996
Mn/Ilupaikadavai GTMS
01.09.1996 – 23.07.1998
Mn/Sithivinayar Hindu College
24.07.1998 – 31.05.1999
J/ Kaithady Navatkuly GTMS
01.06.1999 - 11.11.2001
Jaffna National College of Education
12.11.2001 - to date



### யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முன்னாள் பீடாதிபதி திரு.எஸ்.கே. யோகநாதன் அவர்களின் வாழ்த்துச்செய்தி

ஓய்வு பெறும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட நாடகத்துறை விரிவுரையாளர் திரு. K.R.கமலநாதன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நாடகமும் அரங்கியலும் பாடத்துறையை இலங்கையிலேயே முதன்முதலாக கொண்டு வந்தபோது அந்தத்துறையின் முதலாவது விரிவுரையாளராக இருந்து பாடத்திட்டங்களை தயாரித்ததிலிருந்து அர்ப்பணிப்பான சேவையாற்றி வருபவர் திரு. K.R.கமலநாதன் அவர்கள்.

ஒரு சிறந்த ஆசிரியரானவர் சிறந்த நடிகனாக வகிபாகம் ஏற்க வேண்டும். மாணவர்களுக்கு நாடகமுறை கற்பித்தல் முறையினூடு எந்தப்பாடத்தையும் கவர்ச்சியாகக் கற்பிக்க முடியும் என்றவகையில் எமது கல்லூரியின் அனைத்துப்பாட மாணவ ஆசிரியர்களுக்கும் சிறந்த பயிற்சியளிக்கும் முதன்மை வளவாளராகவும் செயலாற்றியவர். அத்தோடு கல்வியமைச்சு, மாகாணக் கல்வியமைச்சு, அரசசார்பற்ற நிறுவனங்கள், ஏனைய கல்வியியற் கல்லூரிகள், பாடசாலைகளிலும் தனது அர்ப்பண சேவையை வழங்கி வருபவராகவும் கல்வியியலாளர் திரு. K.R.கமலநாதன் அவர்கள் நான் பீடாதிபதியாக இருந்த காலத்தில் நிர்வாகத்திற்கு உதவும் சிறந்த மனிதராகச் சேவையாற்றினார். அவரது நல்ல மனதிற்கு ஓய்வுக்காலத்தில் மிகமகிழ்ச்சியாக வாழ இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.எஸ்.கே.யோகநாதன்**
**முன்னாள் பீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**



### யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய கல்வியியலாளர் கழகத் தலைவர் கலாநிதி. பாலசுப்பிரமணியம் தனபாலன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

உயர்திரு க.இ.கமலநாதன் அவர்கள் வலுவூட்டி வாண்மையாளர்களுக்கு நாடகத்துறையை மிகச் சிறப்பாகப் பயன்படுத்திய அத்துறை சார்ந்த நிபுணத்துவ ஆற்றல் கொண்ட வாண்மையாளராவார். அத்தோடு பல பரிமாணங்களில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பித்ததிலிருந்து கல்வி விழிப்புணர்ச்சி குறும்படங்களை இயக்கி மிகப்பெரும் கல்வி விழிப்புணர்வை எமது பிரதேசம் எங்கும் மேற்கொண்டார். அப்படங்களில் நானும் நடித்துள்ளேன்.

மிகச்சிறந்த நாடக குறும்பட இயக்குநராக, நாடகங்களை எழுத்துருவாக்கம் செய்பவராக, நடிகராக, சிறுவர் நாடகங்களை ஆக்குபவராக, ஆசிரியர்களை வலுவூட்ட நாடகக் கற்பித்தல் முறையைப் பிரயோகிப்பவராக, பாடசாலை மாணவர்களுக்கு நாடகங்களை பயிற்றுவிப்பவராக, சமூகசேவை செயற்பாட்டாளராக, பன்முக ஆற்றல் கொண்ட நல்லாசான் க.இ.கமலநாதன் அவர்கள் பல ஆய்வுக்கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளார்.

எமது மண்ணில் எழுச்சிமிக்க நாடகக் கல்விக் கலாசாரத்தை வளர்த்தவர்களில் இவரின் பங்கு முதன்மையானது. தொடர்ந்து இச்சேவைகளை அவர் தொடரவேண்டும். ஓய்வுக் காலத்தில் மிக மகிழ்ச்சியான நல்வாழ்வு வாழ இறையருளை வேண்டுகின்றேன்.

**கலாநிதி பா.தனபாலன்,**
**தலைவர், ஆசிரியர் கல்வியியலாளர் கழகம்,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**



### Blessing Message from Mr.L.M.D. Dharmasena the Additional Secretary (School Affairs)

It is very delightful to send this message of facilitation to Mr. K.R. Kamalanathan, on his retirement from his 21 year dedicated service as a lecturer at Jaffna National College of Education.

Mr. Kamalanathan is not only a competent lecturer of Drama and Theatre but also a reputed writer who has written many plays for children and to bring about social awareness. He is excellent in training trainee teachers to make use of the dramatic effects in inculcating the concepts of the target subject.

Kamalanathan's contributions helped to secure the first place in Inter-college Drama competition which gave Jaffna National College of Education an identity as pilot College in 2003. Basically he has positive attitude in every thing especially holding the College flag high. I would like to express my congratulations for his yeoman services to the development of education. I wish him a long life with peace and prosperity in his retired period.

**L.M.D. Dharmasena**
**Addl. Secretary,**
**School Affairs,**
**Ministry of Education.**



### யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முதலாவது பீடாதிபதி முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நாடகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.க. இ. கமலநாதன் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நான் விரிவுரையாளராக இருந்தபோது என்னிடம் மாணவர் இவர். அப்போது நாடகத்துறையில் சிறந்து விளங்கினார். பல நாடகங்களை மேடை ஏற்றினார். இவரது நாடகத்துறை ஆற்றலைக் கண்டே யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி விரிவுரையாளராக இணைத்தேன்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நாடகத்துறைக்கு க.இ.கமலநாதன் அர்ப்பண சேவையாற்றினார். பல கல்வி விழிப்புணர்வு நாடகங்களை அரங்கேற்றினார். சிறந்த நாடகத்துறை வளவாளராக ஆசிரியர்களுக்கு பல பயிற்சிகளை வழங்கினார். நாடகத்துறையின் அடுத்தகட்ட வளர்ச்சியாகக் கல்வி விழிப்புணர்வு குறும்படங்களை இயக்கினார்.

இலங்கை முழுவதும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் இப்படங்களைப் பார்த்து நல்ல துலங்கல்களை வெளிக்காட்டினார். பல நாடகத்துறை நூல்களை எழுதியதுடன் பல விருதுகளையும் இவர் பெற்றிருந்தார். அவருடைய சாதனைகளைப் பாராட்டுகின்றேன். என்னுடைய காலத்தில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு இடையிலான நாடகப்பட்டறை போட்டியில் முதற்பரிசை பெற்றுக் கொண்ட பெருமைக்குரியவர் திரு.க.இ.கமலநாதன் ஆவார்.

மாணவர்கள் விரும்பும் நல்லாசிரியராக, நாடக இயக்குநராக, நடிகராக, நாடக எழுத்துருவாக்க கர்த்தாவாக, சிறுவர் இலக்கியங்களைப் படைக்கும் ஆக்கத்திறனுள்ள திரு.க.இ.கமலநாதன் ஓய்வுக் காலத்திலும் மகிழ்ச்சியான நல்வாழ்வு வாழ தொடர்ந்து கல்விச் சேவைகளைச் சிறப்பாக மேற்கொள்ள எல்லாம் வல்ல வித்தக விநாயகர் முடிமன்னர் நல்லருள் புரிவதாக.

**முனைவர் திருநாவுக்கரசு**
**கமலநாதன்**



### யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முன்னாள் பீடாதிபதி கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்களின் வாழ்த்துச்செய்தி

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அறுபதாவது அகவை காணும் திரு. இரத்தினம் கமலநாதனின் மணிவிழாவையொட்டி வெளியிடப்படவுள்ள இம் மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் பாரம்பரியம் மிக்க தென்மராட்சி மண்ணுக்கு பெருமை தேடிக் கொடுத்தவர். கல்வித்துறையில் சேவை செய்பவர்கள் காலமெல்லாம் மதிக்கப்படுவார்கள். எத்துறையைச் சேர்ந்தவர்களுக்கும் இல்லாத பெருமை ஆசிரியத்துவப்பணிக்கு உண்டு.

ஆசிரியத் தொழிலிலே தன்னுடைய பணியினை ஆரம்பித்து தனக்கே உரிய தனித்திறமையினால் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளரானவர். நாடகத் துறையில் தனக்கென தனி முத்திரை பதித்தவர்.

எப்போதும் சுறுசுறுப்புடன் செயல்படும் K.R. கமலநாதன் இருக்குமிடம் கலகலப்பாய் இருக்கும். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நாடகத்துறை வளர்ச்சிக்கு மைல்கல்லாக இருந்தவர். எல்லோருடனும் அன்பாகப் பழகும் சுபாவம் கொண்டவர்.

நிர்வாகத்திற்கு மிகவும் ஒத்துழைப்பாய் இருப்பார். ஆசிரியர், மாணவர் நலன்களில் அக்கறை கொண்டவர். இவை எல்லாவற்றையும் கடந்து தனது சமூகத்தையும் மக்களையும் நேசிக்கின்ற ஒருவராக பல்வேறு சமூகப்பணிகளை ஆற்றி வரும் இவர் சமநிலை ஆளுமை உடையவர். மற்றவர்கள் மனங்கள் நோகாது நடக்கும் மாசற்ற மனிதம். சிறந்த ஆற்றுப்படுத்துநர், நடிகர், குறும்படத் தயாரிப்பாளர், நகைச்சுவையாளர், சிறந்த வளவாளர், சிறந்த குடும்பத் தலைவன் எனப் பல பரிணாமங்களைக் கொண்டவர்.

ஆற்றல், திறமை, அனுபவம், அன்பு ,எளிமை, கல்விப் புலமை எனப் பன்முக ஆளுமைகளுடன் கல்விப் புலத்தைச் சிறப்பித்து வரும் K.R..கமலநாதனின் ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்துகிறேன்.

**ச.அமிர்தலிங்கம்,**
**முன்னாள் பீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,**
**கோப்பாய்.**

(C-3077)

# பொது அறிவித்தல்

## மாநகர சபை யாழ்ப்பாணம்
## பாதீடு-2022

யாழ்.மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான பாதீடு (வரைபு) 2021.11.26 தொடக்கம் 2021.12.10 ஆம் திகதி வரை

- யாழ்.மாவட்டச் செயலகம்
- யாழ்.பிரதேச செயலகம்
- நல்லூர் பிரதேச செயலகம்
- யாழ்.மாநகர சபை - பொதுசனத் தொடர்பு பகுதி
- யாழ்.பொது நூல்நிலையம்
- நவீன சந்தை - வாடிக்கையாளர் சேவை நிலையம்

ஆகிய இடங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இவ் வரைபு பாதீட்டினை பரிசீலித்து பாதீட்டினை மேலும் முன்னேற்றகரமானதாக ஆக்குவதற்கு தேவையான தங்களது கருத்துக்கள், முன்மொழிவுகளினை எதிர்வரும் 2021.12.10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாநகர சபை செயலகத்திற்கு எழுத்து மூலம் அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**2021.11.24** (C-3078)

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்,**
**முதல்வர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.**


# கமலஹாசனுக்கு கொரோனா

(சென்னை)

மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரும், நடிகருமான கமலஹாசனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் சென்னை போரூரில் அமைந்துள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், அமெரிக்கப் பயணம் முடிந்து திரும்பிய பின் இலேசான இருமல் இருந்தது. இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட கொவிட் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொரோ்னாத் தொற்று நீங்கவில்லை என்பதை கருத்தில் கொண்டு பாதுகாப்பாக இருக்குமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். (நி)

# மகிந்த சமரசிங்க இராஜினாமா

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து இராஜினாமா செய்வதாக சபையில் நேற்று அறிவித்தார்.

அமெரிக்கா மற்றும் மெக்சிக்கோவின் தூதுவராக அவர் கடமைகளை ஆரம்பிக்கவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)


# மாந்தை கிழக்கு பிரதேச சபை 2022 ஆம் ஆண்டுக்கான குத்தகை கேள்வி அறிவித்தல்

மாந்தை கிழக்கு பிரதேசசபைக்குட்பட்ட பொன்னகர், பாண்டியன்குளம்,பாலிநகர், நட்டாங்கண்டல் சந்தைகள் அடுத்த வருடம் **01.01.2022** முதல் **31.12.2022** வரையான காலப்பகுதிக்கு குத்தகை வழங்குவதற்கான கேள்விகள் கீழ் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் - **25.11.2021-09.12.2021** வரை (அலுவலக நாட்களில் மு.ப.09.00 மணி முதல் பி.ப.3.30 மணிவரை)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி:- **10.12.2021 பி.ப.12.00 மணிவரை**

கேள்வி திறக்கப்படும் திகதி :- **10.12.2021 பி.ப.1.00**

கேள்வி திறக்கப்படும் இடம் - **மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம்**

கேள்விப்பத்திரங்களை மாந்தை கிழக்கு பிரதேச சபையில் பெற்றுக்கொள்ள முடியும். பெறப்படும் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியினை **தவிசாளர், மாந்தை கிழக்கு பிரதேச சபை, பாண்டியன்குளம், நட்டாங்கண்டல்** என முகவரியிட்டு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்க வேண்டும். இரண்டாவது பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகைக்கானசந்தைகள் | சந்தைவகை | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் வைப்புத்தொகை | மீளளிக்க முடியாத வைப்புத்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | பாண்டியன்குளம் | மரக்கறிச் சந்தை | 8000.00 | 1500.00 | 1000.00 |
| 02 | பாண்டியன்குளம் | மீன் சந்தை | 5000.00 | 1500.00 | 1000.00 |
| 03 | பாண்டியன்குளம் | கோழி இறைச்சிக் கடை | 5000.00 | 1500.00 | 1000.00 |
| 04 | நட்டாங்கண்டல் | மரக்கறிச் சந்தை | 8000.00 | 1500.00 | 1000.00 |
| 05 | நட்டாங்கண்டல் | மீன் சந்தை | 5000.00 | 1500.00 | 1000.00 |
| 06 | நட்டாங்கண்டல் | கோழி இறைச்சிக் கடை | 5000.00 | 1500.00 | 1000.00 |
| 07 | பொன்னகர் | மரக்கறிச் சந்தை | 5000.00 | 1500.00 | 1000.00 |
| 08 | பொன்னகர் | மீன் சந்தை | 5000.00 | 1500.00 | 1000.00 |
| 09 | பொன்னகர் | கோழி இறைச்சிக் கடை | 5000.00 | 1500.00 | 1000.00 |
| 10 | பாலிநகர் | மரக்கறிச் சந்தை | 13000.00 | 1500.00 | 1000.00 |
| 11 | பாலிநகர் | மீன் சந்தை | 7000.00 | 1500.00 | 1000.00 |
| 12 | பாலிநகர் | கோழி இறைச்சிக் கடை | 8000.00 | 1500.00 | 1000.00 |
| 13 | பாலிநகர் | வாராந்த சந்தை | 3000.00 | 1500.00 | 1000.00 |

**நிபந்தனைகள்**

- பாலிநகர் வாராந்தச் சந்தையில் சகலவிதமான அனுமதிக்கப்பட்ட வர்த்தக நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும்.
- இலங்கைப் பிரஜையாகவும், தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
- உள்ளூராட்சி மன்றத்தினால் தவறாகக் கணிக்கப்பட்டவர்கள் என தெரியவருமிடத்து கேள்வி கோர தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.
- எந்தவொரு கேள்வியையும் காரணம் தெரிவிக்காது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபை தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
- ஏற்றுக்கொள்ளக்கூடியஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
- வியாபார உத்தரவுக்கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.
- சபையால் விதிக்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.
- சித்தியடையும் கேள்விதாரர்கள் கேள்வித்தொகையின் மூன்றில் ஒரு பகுதிப் பணத்தை ஒரு வார காலத்துக்குள் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

**தவிசாளர்**
**பிரதேச சபை,**
**மாந்தை கிழக்கு.**

C-3076


# ஆளும் கட்சி எம்.பியை தாக்க முற்பட்டதால் பாராளுமன்றத்தில் அமளி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டி ஆராச்சி மீது எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தாக்குதல் நடத்த முயற்சித்ததால் பாராளுமன்றில் நேற்று பதற்றம் ஏற்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, சபைக்கு நடுவில் வந்து, திஸ்ஸ குட்டி ஆராச்சியை தாக்க முயற்சித்துள்ளார். அப்போது அந்த இடத்திற்குச் சென்ற சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அதனை தடுத்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டி ஆராச்சி கடந்த சனிக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது பெண்களை அவமதிக்கும் வகையில் பேசியமை தொடர்பில் சபாநாயகர் அவரை எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பொதுமக்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை-பிரதமர் மகிந்த

(கொழும்பு)

பொதுமக்களின் பாதுகாப்பிற்கே அரசாங்கம் முன்னுரிமை அளிக்குமென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கான ஆரம்ப அறிக்கையை வெளியிட்ட பிரதமர், புதிய அரசியலமைப்புக்கான வரைபு தற்போது வகுக்கப்படுவதாகவும் அதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களின் விவாதத்திற்கு முன்வைக்கப்படும் எனவும் தெரிவித்தார். தற்போதைய அரசாங்கம் பொதுமக்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கிறது. மேலும் கொரோனாத்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது.

அதற்கமைவாக குறுகிய கால மற்றும் நீண்ட காலத் திட்டங்களுடன் கூடிய வரவு -செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ சமர்ப்பித்தார் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## பல்கேரியாவில் திடீரென தீப்பற்றிய பேருந்து

# 12 குழந்தைகள் உட்பட 45 பேர் உடல் கருகிப்பலி

(பல்கேரியா)

பல்கேரியாவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள நெடுஞ்சாலையொன்றில் பயணித்த பேருந்து தீப்பிடித்ததில் சுமார் 45 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை போஸ்னெக் கிராமத்திற்கு அருகே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பல்கேரியா உள்துறை அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் 12 குழந்தைகளும் உள்ளடங்குவதாகவும் விபத்திலிருந்து 7 பேர் காப்பாற்றப்பட்டதாகவும் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (நி)

# போக்குவரத்து வசதியின்மையால் மாணவர்கள் பாடசாலைக்கு செல்லவில்லை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் மாணவர்களை பாடசாலையில் இருந்து வீடு திரும்புவதற்கான தனியார் பேருந்து சேவையை நேற்று முன்தினம் ஆரம்பிப்பது எனத் தெரிவிக்கப்பட்ட நிலையிலும் குறித்த பேருந்து சேவை இடம் பெறவில்லை என மாந்தை கிழக்கு பெற்றோர்கள் தெரிவித்தனர்.

காலை 6.40 மணிக்கு பனங்காமம் சந்தியில் இருந்து பயணிக்கும் தனியார் பேருந்து பாண்டியன்குளம், செல்வபுரம், குமாரசாமிபுரம், பாலிநகர், மல்லாவி மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மாணவர்களை ஏற்றியவாறு பயணிக்கும். பாடசாலை முடிந்தவுடன் இப்பேருந்து சேவை இடம் பெறவில்லை.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து சங்கத் தலைவரிடம் கேட்ட போது நேற்று முன்தினம் முதல் மாணவர்கள் வீடு திரும்பும் வகையில் பேருந்து சேவை நடத்தப்படும் எனத் தெரிவித்தார்.

ஆனால் பேருந்தினை எதிர் பார்த்திருந்த மாணவர்கள் ஏமாற்றம் அடைந்ததுடன் பெற்றோர்களின் துணையுடன் வீடுகளுக்குத் திரும்பினர். மாந்தை கிழக்கிற்கான தனியார் பேருந்து சேவைகள் ஒழுங்காக நடைபெறாததன் காரணமாக பல மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் வீடுகளில் இருப்பதாக பெற்றோர்களினால் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் சென்று வரக் கூடிய வகையில் தனியார் பேருந்து சேவைகள் இடம் பெற வேண்டும் எனவும் இதற்கான நடவடிக்கையினை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் ஆகியோர் எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் தெரிவித்தனர்.(5-4-350)



முல்லைத்தீவு பழம்பாசி 17ஆம் கட்டை கிராமத்தில் அறநெறி பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் தங்கராசா நிசாந்தன் தலைமையில் இந்நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்றது. (படம்:-கிருஷ்ணகுமார்)

# பூநகரி பிரதேசசபை பட்ஜெட் ஆளும் தரப்பினால் தோற்கடிப்பு

(முறிகண்டி)

பூநகரி பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஆளும் தமிழ்த் தேசியகூட்டமைப்பினாலேயே தோற்கடிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பு நேற்று தவிசாளர் அ.ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இதன்போது குறித்த வரவு-செலவுத்திட்டத்திற்கு 11 பேர் கொண்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர்களில் 10 பேரும் ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ஒருவரும் எதிராக வாக்களித்தனர்.

குறித்த வரவு-செலவுத் திட்டம் ஆளும் தரப்பினாலேயே தோற்கடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (4-5-100-316)

# விவசாயத்தை மேம்படுத்த குளங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும்

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவின் படுகாட்டுக் குளத்தினை பழம்பாசிக் குளத்துடன் இணைக்க வேண்டும் என பழம்பாசி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

10 அடி நீர் மட்டத்தினைக் கொண்ட படுகாட்டுக் குளத்தினை பழம்பாசிக் குளத்தை இணைக்க வேண்டும் என்பதே இக்கிராம பொது அமைப்புகளின் கோரிக்கையாகும்.

இதே வேளை தவசிக் குளத்தில் இருந்து விளாப்புக் குளத்திற்கு நீர் நிரப்ப வேண்டும். இவற்றினை செய்வதன் மூலம் 500 ஏக்கருக்கு மேலான நிலப்பரப்பில் விவசாய முயற்சிகளை மேற்கொள்ள முடியும் எனவும் கடந்த அரசாங்கத்தில் இவ்வேலைத் திட்டத்தினை மேற்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் மேற்படி வேலைத் திட்டங்கள் கைவிடப்பட்டுள்ள நிலையில் காணப்படுகின்றன.

இவ் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டால் பழம்பாசி கிராமத்தின் விவசாய முயற்சிகள் கூடுதலாக மேற்கொள்ள முடியும்.

இதற்கான வேலைத் திட்டங்களைபும் தற்போதைய அரசு முன்னெடுத்து குளங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தன.

இது தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களிலும் ஆராயப்பட்ட போதிலும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (4-5-350)



கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினரின் ஏற்பாட்டில் ஏற்பாட்டில் எதிர்வரும் மழைகாலத்தில் வெள்ள அனர்த்தத்தில் இருந்து மக்களை மீட்பதற்கான படகு கொரிய இன்ஜின் மற்றும் பாதுகாப்பு அங்கிகளை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் இராணுவத்தினரிடம் வழங்கி வைத்தார். (படம்:-தேவானந்தன்)

# புனரமைக்கப்படாத வீதியால் போக்குவரத்தில் இடர்பாடு

(கண்டாவளை)

கிளிநொச்சி தட்டுவன் கொட்டி கிராமத்துக்கான பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் உரிய காலத்தில் முன்னெடுக்கப்படாமையினால்தற்போதைய பருவ மழையினால் குறித்த கிராமத்துக்கான போக்குவரத்துக்களில் பல்வேறு இடர்பாடுகள் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தட்டுவன் கொட்டி கிராமத்தில் 95 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது வாழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் கடலாலும் கண்டல் நில சதுப்பு நிலங்களாலும் சூழப்பட்ட குறித்த கிராமத்திற்கான ஒரே ஒரு போக்குவரத்து வீதியாக ஆனையிறவு தட்டுவன்கொட்டி வீதி காணப்படுகிறது.

இக் கிராமத்திலிருந்து தொழில் நிமித்தம் வெளியிடங்களுக்குச் செல்வோர் மற்றும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே குறித்த வீதியை புனரமைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-315)

# தடை உத்தரவுக்கு எதிரான வழக்குத் தீர்ப்பு இன்று

(நெளுக்குளம்)

மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு எதிராக வழங்கப்பட்ட தடையுத்தரவிற்கு எதிராக எதிர் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக முன்னாள் அரசியல் கைதி செல்வநாயகம் அரவிந்தன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் எதிர்மனு தாக்கல் செய்துவிட்டு ஊடகத்திற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

இவ் வழக்கின் முழுமையான தீர்ப்பு இன்று புதன்கிழமை வழங்கப்படும்.

இதேநேரம் பொலிஸார் வீடுகளில் நினைவேந்தலை செய்வதற்கு தாங்கள் இடையூறாக இருக்க மாட்டோம் என்பதனை நீதிமன்றில் தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்தார். (4-299-250)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

சிவா அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இரத்த வகைகளின் பற்றாக்குறையைத் தீர்க்கும் முகற் செயற்றிட்டமாக இரத்ததான முகாம் இன்று 24 ஆம் திகதி புதன் கிழமை காலை 8 மணி முதல் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இடம் பெறும்.

குறித்த இரத்ததான முகாமில் ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (5-4-18)




# குறுந்தூர போக்குவரத்து சேவை நடத்துமாறு கோரும் மக்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி ஆனையிறவு நாவல் கொட்டியான் மற்றும் உமையாள்புரம் ஆகிய பிரதேசங்களுக்கான குறுந்தூர போக்குவரத்துச் சேவைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


கிளிநொச்சி ஏ-9 வீதியின் திருமுறிகண்டி முதல் ஆனையிறவு வரைக்குமான பகுதிகளுக்கான குறுந்தூர பேருந்து சேவை நடத்தப்பட வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரியுள்ளனர்.

அதாவது திருமுறிகண்டி முதல் பரந்தன் வரைக் குமான குறுந்தூர சேவைகள் மாத்திரமே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும், ஆனையிறவு நாவல் கொட்டியான் உமையாள்புரம் வரைக்குமான சேவைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

இதனால் இந்தப்பிரதேச மக்கள் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (5-4-315)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17.11.2021- 15.12.2021



**நாளும் ஒரு நல்ல காரியம் செய்ய வேண்டுமென்று நினைக்கும் சிம்ம இராசி வாசகர்களே!**

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் சூரியன் சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். அவரோடு கேதுவும் இணைந்திருக்கின்றார். குருவின் நேரடி பார்வை உங்கள் இராசியில் பதிவதால் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும்.

### செவ்வாய்-சனி பார்வைக் காலம்

மாதத் தொடக்கத்தில் இருந்து கார்த்திகை மாதம் 20 ஆம் திகதி வரை செவ்வாய்-சனி பார்வை இருக்கின்றது. பூமிகாரகன் செவ்வாய் சகாய ஸ்தானத்தில் இருப்பதால் வாங்கிப் போட்ட இடத்தை விற்க முடியவில்லையே, கட்டிய கட்டடத்திற்கு வாடகைக்கு குடிவர ஆள் வரவில்லையே" என்றெல்லாம் நினைத்தவர்களுக்கு நல்ல தகவல் இப்போது கிடைக்கும். வாழ்க்கைத் துணை வழியே சிறுசிறு பிரச்சினைகள் வரலாம்.

### விருச்சிக புதனின் சஞ்சாரம்

கார்த்திகை முதல் நாளே விருச்சிக இராசிக்குப் புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 2, 11 இற்கு அதிபதியானவர் புதன். அவர் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும். தொழில் வெற்றி நடைபோடும். வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் கிடைக்கலாம்.

பணிபுரிபவர்களுக்கு பாராட்டும், புகழும் கூடும். அரசு வேலைக்காக முயற்சித்தவர்களுக்கு அதுவும் கை கூடும். புதிய சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறலாம்.

### தனுசு புதனின் சஞ்சாரம்

கார்த்திகை மாதம் 18 ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் செல்கின்றார். அங்குள்ள சுக்கிரனோடு சேர்ந்து புத-சுக்கிர யோகத்தை உருவாக்குகின்றார். எனவே பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய தகவல் கிடைக்கலாம். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினை படிப்படியாக அகலும். புனிதப் பயணங்களை மேற்கொள்வீர்கள். புத-சுக்கிர யோகம் ஏற்படுவதால் சொத்துக்களால் ஆதாயமும், செல்வ நிலையில் உயர்வும் ஏற்படும்.

### மகர சுக்கிரனின் சஞ்சாரம்

கார்த்திகை 19 ஆம் திகதி மகர இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார்.




உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். சகாய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன் 6இல் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த ஊதிய உயர்வும், இலாகா மாற்றங்களும் கிடைக்கலாம். பணி நிரந்தரம் பற்றிய நல்ல தகவல் வந்து சேரும்.

### விருச்சிக செவ்வாயின் சஞ்சாரம்


கார்த்திகை 20 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு யோகம் செய்யும் கிரகம் செவ்வாயாகும். அவர் தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் எடுத்த முயற்சிகள் கைகூடும். தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். வாரிசுகளின் திருமணங்களை சிறப்பாக நடத்தி வைப்பீர்கள். சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும். முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றம் தரும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் வருமானம் திருப்திகரமாக இருக்கும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்யாணம் மற்றும் படிப்பு சம்பந்தப்பட்ட வகையில் எடுத்த முயற்சி கைகூடும். வீடு மற்றும் இடங்கள் உங்கள் பெயரில் வாங்கும் யோகம் ஏற்படும். பணிபுரியும் இடத்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும். அரசு வேலைக்காக முயற்சித்தவர்களுக்கு அதுவும் கைகூடும்.

## புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**எத்தனை பிரச்சினை வந்தாலும் அதை எளிதில் சமாளிக்கும் கன்னி இராசி வாசகர்களே!**

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் புதன், தனஸ்தானத்தில் சகாயஸ்தானாதிபதி செவ்வாயோடு இணைந்திருக்கின்றார். எனவே பொருளாதாரத்தில் முன்னேற்றமும், புதிய முயற்சிகளில் வெற்றியும் கிடைக்கும். 6 இல் குரு இருப்பதால் பக்கத்தில் இருப்பவர்களிடம் பகைமை பாராட்டாமல் இருப்பது நல்லது.

### செவ்வாய்-சனி பார்வைக் காலம்

மாதத் தொடக்கத்தில் இருந்து கார்த்திகை 20 ஆம் திகதி வரை செவ்வாய்-சனி பார்வை இருக்கின்றது. எனவே கொஞ்சம் பொறுமையோடு செயற்பட வேண்டிய நேரமிது.

பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படலாம். பூர்வீக சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொள்வதில் தாமதங்கள் ஏற்படும். சொத்துக்களை வாங்கும் பொழுது பத்திரங்களைச் சரி பார்ப்பது அவசியமாகும்.

### விருச்சிக புதனின் சஞ்சாரம்

கார்த்திகை முதல் நாளே விருச்சிக இராசிக்குப் புதன் செல்கின்றார். உங்கள் இராசிநாதன் சகாய ஸ்தானத்தில் விரயாதிபதி சூரியனோடு இணையும் நேரத்தில் விரயங்கள் கூடுதலாகத் தான் இருக்கும்.

தொழில் ஸ்தானாதிபதியாகவும் விளங்குவதால் பழைய தொழிலைப் பைசல் செய்துவிட்டுப் புதிய தொழிலில் கவனம் செலுத்துவீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக் கசப்புகள் மாறும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

### தனுசு புதனின் சஞ்சாரம்

கார்த்திகை 18 ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் செல்கின்றார். அங்குள்ள சுக்கிரனோடு சேர்ந்து புத சுக்கிர யோகத்தை உருவாக்குகின்றார். உங்கள் இராசிநாதன் புதனும் தனாதிபதி சுக்கிரனும் இணைந்திருக்கும் இந்த நேரம் அற்புதமான நேரமாகும். பொருளாதாரம் திருப்தி தரும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும்.

மங்கல ஓசை மனையில் கேட்கும் சூழல் அமையும். மக்கள் செல்வங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள். தங்கம், வெள்ளி வாங்கும் யோகம் உண்டு.

### மகர சுக்கிரனின் சஞ்சாரம்




கார்த்திகை 19 ஆம் திகதி மகர இராசிக்குச் சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். பாக்கிய ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன், பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம் தொட்டது துலங்கும். தொழில் வளம் சிறக்கும். கற்ற கல்விக் கேற்ற வேலை கிடைக்கும். பணிபுரிபவர்களுக்கு உத்தியோக உயர்வு மற்றும் ஊதிய உயர்வு எதிர்பார்த்தபடி கிடைக்கும்.

### விருச்சிக செவ்வாயின் சஞ்சாரம்

கார்த்திகை 20 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது கூடுதல் கவனத்துடன் செயற்பட வேண்டும்.

பெரிய மனிதர்களின் தொடர்பு பகையாகிப் போகலாம். பொருளாதாரத்தில் சில இழப்புகளைச் சந்திக்கும் சூழ்நிலை உண்டு. மகிழ்ச்சி அதிகரிக்க மகாலட்சுமியை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும் யோகம் உண்டு. பொருளாதாரப் பிரச்சினை அகலும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. சொத்துக்களால் சில பிரச்சினைகள் உருவாகலாம். சொந்த பந்தங்களின் அனுசரிப்பு குறையும். பணிபுரியும் பெண் களுக்கு மனதிற்கு இனிமை தராத மாற்றங்கள் வரலாம். பிள்ளைகளின் படிப்பிற்கேற்ற வேலை கிடைத்து மகிழ்ச்சியடைவீர்கள்.

## பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படலாம்!

(தொடரும்)

# பொறுப்பற்ற நடவடிக்கைகளால் நாடு எந்த நேரமும் முடக்கப்படலாம்

## ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை



(கொழும்பு)

நாட்டை முடக்கும் நடவடிக்கையானது எந்த நேரத்திலும் எடுக்கக்கூடியதொன்றென சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அதற்கான சுகாதார வழிகாட்டல்களை மாத்திரமே வெளியிட வேண்டியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், நாட்டில் தற்போது மக்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுவது குறைந்து வருகிறது. சிலர் பொது இடங்களில் முகக்கவசம் அணியாமலும் இருக்கின்றனர்.

மீண்டுமொரு முடக்கம் தேவையா, இல்லையா? என்பதை நாட்டு மக்களின் நடத்தையே தீர்மானிக்கும்.

எதிர்வரும் கிறிஸ்மஸ் காலத்தில் நாடு மூடப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டால் அதிர்ச்சியடைய வேண்டாம். பொறுப்பற்ற சிலர் இரகசிய கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்கின்றனர்.

தற்போதைய, தீவிரமான சூழ்நிலையிலிருந்து மீள முயற்சிக்கும் நேரத்தில் இது போன்ற கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்வதையும் பங்கேற்பதையும் தவிர்க்குமாறு கோருகிறேன்.

அத்துடன், உரிய தரப்பினரிடம் அனுமதி பெறாது முன்னெடுக்கப்படும் நிகழ்வுகள் இரத்துச் செய்யப்படலாம்.

இந்தப் பண்டிகை காலத்தில் மீண்டும் ஒரு கொவிட் கொத்தணி உருவாகாமல் இருப்பதற்காக நாம் கவனத்துடன் செயற்பட வேண்டும் எனவும் மருத்துவர் தெரிவித்தார். (நி)

# பாலர் பாடசாலைகளில் கலை நிகழ்வுகளுக்கு தடை

(கொழும்பு)

**பாலர் பாடசாலைகளில் கலை நிகழ்ச்சிகளை நடத்த எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை என சிறுவர் அபிவிருத்தி குறித்த தேசிய செயலகத்தின் பணிப்பாளர் நயனா டி சில்வா அறிவித்துள்ளார்.**

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், கலை நிகழ்ச்சிகளை நடத்துதல் மற்றும் அதற்காக ஆயத்தங்களை செய்தல் என்பனவற்றின் மூலம் கொவிட் பரவக் கூடும்.

பாலர் பாடசாலைகளில் கற்கும் சிறார்கள் முகக் கவசம் அணியாமையானது பிரச்சினையாக உருவாகியுள்ளது.

எனவே அவர்களுக்கு உரிய முறையில் முகக் கவசங்களை அணிவிப்பதற்கு பெற்றோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

# பதிவுத் திருமணங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டில் பதிவுத் திருமணங்களின் எண்ணிக்கை கடந்த வருடம் குறைந்திருந்ததாக குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்தது. 2019 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து 63 ஆயிரத்து 378 பதிவுத் திருமணங்கள் இடம் பெற்றன.

கடந்த வருடத்தில் இத்தொகை ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 61 ஆகக் குறைவடைந்திருந்தது.

கம்பஹா மாவட்டத்திலேயே ஆகக் கூடுதலான திருமணப் பதிவுகள் இடம்பெற்றுள்ளதாக குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# கிளைபோசேட்டு உள்ளிட்ட பீடை கொல்லிகளின் தடை நீக்கம்

## பீடை கொல்லி பதிவாளர் ஜயக்கொடி

(கொழும்பு)

கிளைபோசேட்டு உள்ளிட்ட பீடை கொல்லிகளின் பாவனை மற்றும் விற்பனையை தடை செய்து 2014 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யும் புதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

பீடை கொல்லிகள் பதிவாளர் ஜயக்கொடி ஆராச்சிகே சுமித்தினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது. (நி)

# வர்த்தமானி வலுவிழக்க செய்யப்படும்

## விவசாய அமைச்சர்

(கொழும்பு)

கிளைபோசசேட்டு உள்ளிட்ட கிருமி நாசினிகளுக்கான தடையை நீக்கி, களைநாசினி பதிவாளரால் வெளியிடப்பட்ட வர்த்தமானி வலுவிழக்கச் செய்யப்படும் என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். (நி)

# இன்று ஒரு தகவல்

## சுக துக்கங்களில் நம் பங்கு

ஒரு மனிதன் வாழ்க்கையில் ஏற்படும் முக்கியமான கட்டங்கள் அவனுக்கு அல்லது அவனைச் சார்ந்தவர்களுக்கு நடக்கும் திருமணங்கள் அல்லது மரணங்கள்.

இந்த இரு முக்கியமான சம்பவங்களில் நாம் கலந்து கொள்ளாவிட்டால் அம்மனிதருக்கு நண்பராகவோ உறவினராகவோ தொடர்பு உடையவராகவோ இருக்கத் தகுதி இல்லாதவர்களாக ஆகிவிடுகிறோம்.

அழைக்கப்படும் நிகழ்ச்சி திருமணமாகும். அழைக்கப்பட்டிருந்தும் திருமணங்களில் சிலர் கலந்து கொள்ளாமல் இருப்பதற்கு நேரமின்மை, வசதியின்மை, பணத்திற்குச் சோம்பற்படுதல், நம்மை மதிப்பார்களோ மாட்டார்களோ என்கிற சந்தேகம், கூட்டத்தைப் பார்த்ததும் ஏற்படுகிற கூச்சம் ஆகியவையே தலையாய காரணங்கள்.

சமுதாயக் கடமைகள் எத்தகைய இன்னல்களுக்கு இடையேயும் ஆற்றப்பட வேண்டும்.

திருமணங்களில் கலந்து கொள்வதானால் நம் உள்ளத்தில் ஒருவிதக் கிளர்ச்சி உண்டாகிறது. சோர்ந்து போன மனம் புத்துணர்ச்சி பெறுகிறது. நண்பர்களையும் உறவினர்களையும் ஒரு சேரக் காணும் போது நம் கடலத்தனைக் கவலைகள் கடுகளவாகின்றன. தாளம் போட்டு ஆடும் சோக கீதங்கள் அந்த மங்கல கீதத்தின் முன் தவிடு பொடியாகின்றன.

சம்பந்தப்பட்டவர்கள் இலட்ச ரூபாய் கிடைத்தது போல நம் வரவால் மகிழ்கின்றனர்.

இத்துணை நன்மைகளின் முன், செலவாகும் பணத்தையும் பயண தூரத்தையும் நேரத்தையும் எண்ணிப் பார்த்தால் அவை மிகமிகச் சாதாரணம்.

நெருக்கமில்லாதவர்கள் நெருங்குவார்கள். மதிக்கத் தவறியவர்கள் மதிப்பார்கள். நம் கூச்சம் மெல்ல மெல்ல விலகி ஓடும்.

அழைக்கப்படாத நிகழ்ச்சி மரணமாகும். உரியவரைச் சோகம் ஆட்டிப் படைக்கும் போது நாம் உறுதுணையாய் இருந்து உதவ வேண்டும். ஆழந்தெரியாத சோகத்தில் ஆழ்ந்து விட்ட அவர்களுக்கு ஆறுதல் கூற வேண்டும்.

சில சமயங்களில் இவையெல்லாம் போலியான நடைமுறைகளே என்று எண்ணத் தோன்றும். ஆனாலும் இவை இதயத்திற்கு இதம் தரும் செயல்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

இவ்விரண்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் எதிர்பாராத சூழ்நிலையில் உரியவர்களைச் சந்திக்கும் போது அசடு வழிந்து கொண்டே எதையாவது சொல்லி வைப்பது போலிச் சமாதானங்களாகவே இருக்கும்.

மனமிருந்தால் நிச்சயம் மார்க்கம் உண்டு. மனிதர்களின் மனத்தில் இடம்பிடிக்க வேண்டுமென்றால் அவர்களின் சுக துக்கங்களில் அவசியம் பங்கு கொள்ள வேண்டும்.

இதை நாம் ஒரு Golden theory ஆக வைத்துக் கொண்டால் பல வகையாலும் பயன்பெறுவது நிச்சயம்!

**லேனா தமிழ்வாணன்**




# சிறுவர் அரங்கம்

என்ன வியப்பு! அதனுள் இருந்து விதவிதமான உணவுப் பொருட்கள் வந்தன. சுவையான அவற்றை எல்லோரும் மகிழ்ச்சியாக உண்டனர்.

மீண்டும் அந்தப் பூசணிக் காயை ஒன்று சேர்த்தனர். பழையபடி அது முழுப் பூசணிக் காய் ஆனது. மகிழ்ச்சி அடைந்த அவர், "இது மந்திரப் பூசணிக்காய்.

நமக்கு உணவு தேவைப்படும் போது பிளந்தால் உணவு கிடைக்கும் மீண்டும் சேர்த்து விட்டால் பழையபடி ஆகி விடும். இனி நமக்கு உணவுப் பஞ்சமே இல்லை, நாம் குருவிகளுக்கு செய்த உதவிக்கு இத்தனை பெரிய உதவியாக செய்திருக்கிறது, அவற்றை நாம் மறக்கக்கூடாது" என்றார்.

## அதிசய பூசணிக்காய்



"வீட்டின் முன் புறத்தில் ஒரு பூசணிக்காய் உள்ளது. அதைக்கொண்டு வாருங்கள். அதற்குள் என்ன இருக்கிறது என்று பார்த்து விடலாம்" என்றாள் மனைவி.

அந்தப் பெரிய பூசணிக்காயை உருட்டிக் கொண்டு வந்தான் அவன். கத்தியால் அதை வெட்டினான். உள்ளிருந்து அழகான ஆடைகள், விலை உயர்ந்த மணிகள் கொட்டின.

அதற்குள் அவரது குழந்தைகள் ஜன்னலோரம் இருந்த மூன்றாவது பூசணிக் காயையும் கொண்டு வந்து கொடுக்க, நல்லதம்பி அதை வெட்டினார். அதற்குள் இருந்து பொற்காசுகள் கொட்டின.

அதன் பிறகு அவரும் மனைவியும் குழந்தைகளும் நல்ல உணவு உண்டனர். விலை உயர்ந்த ஆடைகளை அணிந்தனர். மிகப் பெரிய வீடு ஒன்றைக் கட்டத் தொடங்கினார்கள். பெரிய பள்ளியில் படிக்க அவரது குழந்தைகள் சென்றார்கள். நல்லதம்பி தன்னைப் போல் ஊரில் கஷ்டப்பட்டவர்கள் அனைவருக்கும் உதவி செய்யத் தொடங்கினார்.

உழவர் சில நாட்களில் பெருஞ் செல்வனானதையும், தன்னை விட பெரும் புகழ் பெற்றதையும் அறிந்தார் பண்ணையார். உழவரின் வீட்டிற்கு வந்த அவர்,

டேய்! நல்லதம்பி! உனக்கு எங்கிருந்து இவ்வளவு செல்வம் கிடைத்தது? உண்மையைச் சொல்" என்று கேட்டார். அவரும் நடந்ததை எல்லாம் அப்படியே சொன்னார்.

பண்ணையார் தன் மாளிகைக்கு வந்தார். தன்னை விட நல்லதம்பி பெரிய பணக்காரன் ஆனதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை, பொறாமை குணம் படைத்த அவர் எப்படியாவது மேலும் செல்வம் சேர்க்க வேண்டுமென்று நினைத்தார்.

(தொடரும்)

# மகாபாரதம்

253



**காலத்தின் வலிமை**

காலத்தின் வலிமை பற்றி விரோசன் மகனான பலிக்கும், இந்திரனுக்கும் நடந்த உரையாடலைக் கேள் என பீஷ்மர் தருமருக்கு சொல்லத் தொடங்கினார்.

இந்திரன், பிரம்ம தேவனிடம், "தானம் செய்வதில் தளராது இருந்த பலி எங்கே? பலி இருக்கும் இடத்தை அறிய விரும்புகிறேன்.

அந்தப்பலி வாயு வாய் எங்கும் உலவினான். வருணனாக இருந்து மழை பெய்தான். சூரிய சந்திரனாக இருந்து உலகுக்கு ஒளி நல்கினான். தீயாக இருந்து உலகைத் தகிக்கச் செய்தான்.

தண்ணீராக இருந்து உயிர்களின் தாகத்தைப் போக்கினான். திக்குகளை விளங்கச் செய்தான். அவன் எங்கே இருக்கிறான்.. சொல்வீராக..." என்றார்.

பிரம்ம தேவர், "ஒருவர் கேட்கும் போது பொய் கூறக்கூடாது. ஆதலால் உண்மையைச் சொல்கிறேன். அந்தப் பலி ஒட்டகமாகவோ, பசுவாகவோ, கழுதையாகவோ, குதிரையாகவோ ஒரு பாழடைந்த வீட்டில் இருக்கும் தேடிப் பார்" என்றார்.

இந்திரன் "பலி உண்மையில் பாழடைந்த வீட்டில் இருந்தால்.. அவனை நான் கொல்லலாமா?" என்றார். பிரம்ம தேவர், "இந்திரா.. அவனிடம் நியாயத்தைக் கேள். கொல்லாதே" என்றார்.

இந்திரன் ஐராவதத்தின் மீது ஏறி எங்கும் பலியைத் தேடினான். பாழடைந்த வீட்டில் கழுதையாக இருந்த பலியைக் கண்டு, "நீ ஏன் இந்தப் பிறவியை எடுத்தாய்? செல்வம் அனைத்தையும் தொலைத்து விட்டுக் கழுதையாக பிறந்துள்ளாயே, உனக்கு இப்பிறவியில் துன்பம் ஏற்படவில்லையா?.

உலகெங்கும் சுற்றித் திரிந்து பெருஞ் செல்வத்தைச் சேர்த்தாயே.. இப்போது எங்கே அந்தச் செல்வம்? உனது நிலை பரிதாபமாய் உள்ளதே.

நீ பலியாக இருந்த போது இன்ப போகங்களை அனுபவித்துப் பொருளை எல்லோருக்கும் வாரி வழங்கினாய். உன் எதிரில் தேவ மகளிர் நடனம் ஆடினர். கந்தர்வர்கள் ஏழிசை பாடினர்.

நீ, இரத்தினங்கள் பதிக்கப்பட்ட தங்கக் குடையின் கீழ் அமர்ந்திருந்தாய். யாகத்தின் போது ஆயிரம் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்தாய். இப்போது என்ன வாயிற்று அந்த வைபவம் எல்லாம்" என்று எள்ளி நகையாடினார்.

இந்திரனின் பேச்சைக் கேட்ட பலி.. "தேவனே உனது அறியாமைக்கு வருந்துகிறேன். பிறர் வருந்துமாறு பேசுவது உன் தகுதிக்கு இழுக்காகும். நீ குறித்த குடை மாலை ஆகியவை குகையில் மறைத்து வைக்கப்பட்டுள்ளன.

நல்ல காலம் வரும் போது அவை மீண்டும் என்னிடம் வரும். ஆகுவது ஆகும் காலத்துக்கு ஆகும், போகும் காலத்து அனைத்தும் போகும். இது காலத்தின் விசித்திரம்.

இப்போது உன்னிடம் மிகுந்த பொருள் உள்ளதால் உன்னை நீயே புகழ்ந்து கொள்கிறாய். இந்தக் காலம் அப்படியே இருக்காது. மாறும்.

சாதுக்கள் துன்பம் கண்டு வருந்தமாட்டார்கள். இன்பத்தில் மூழ்கி திளைக்கவும் மாட்டார்கள். இரண்டையும் சமமாகக் கருதி மன அமைதியுடன் இருப்பர்.

செல்வச் செருக்கால் இறுமாந்து பேசாதே. நான்கூட ஒரு காலத்தில் அப்படித்தான் இருந்தேன். காலம் மாறி விட்டது. இது மாறிக் கொண்டே இருக்கும் எல்லாம் அதன் கையில் தான் உள்ளது" என்றான். (தொடரும்)

உண்மைக்குப் பகை உள்ளத்தில் தோன்றும் பயம்.
- ராஜாஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நினைவேந்தலைத் தடுக்கின்ற பொலிஸாரின் இனவஞ்சகம்

மாவீரர்களை நினைவேந்துவதைத் தடை செய்ய வேண்டும் எனக் கோரி நீதிமன்றங்களில் மனுத் தாக்கல் செய்கின்ற ஒரு கலாசாரத்தை அண்மைக்காலமாக இலங்கைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நவம்பர் 21 தொடக்கம் நவம்பர் 27வரையான மாவீரர் வாரத்தில் இவ்வாறானதொரு மனுவை நீதிமன்றங்களில் தாக்கல் செய்து, தடை உத்தரவைப் பெறுகின்ற முயற்சியில் பொலிஸார் ஈடுபடுவர்.

எனினும் பொலிஸாரின் மேற்போந்த முயற்சிகளுக்கு சில இடங்களில் சாதகமான தீர்ப்புக் கிடைத்தாலும் இன்னும் சில இடங்களில் அவர்களின் கோரிக்கை நியாயமற்றதெனக் காரணங்காட்டி அவர்கள் தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், மாவீரர்களை நினைவேந்துவது தடை செய்யப்பட வேண்டுமெனக் கோரி மல்லாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை நீதிமன்றங்களில் பொலிஸார் தாக்கல் செய்த மனு குறித்த நீதிமன்றங்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

நினைவேந்தல் என்பது அடிப்படை மனித உரிமை என்ற வகையில் அதனைத் தடை செய்ய முடியாது.

மாறாக, நினைவேந்தலின்போது; சட்டத்துக்கு மாறாக – முரணாக யாரேனும் நடந்தால் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய முடியும் என்ற விளக்கத்தை முன்வைத்து மேற்படி நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கியுள்ளன.

இங்கு பிரஸ்தாப நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், நினைவேந்துவது மனித உரிமை. அதனை எவரும் தடை செய்ய முடியாது என்ற அடிப்படைநீதி சகல தரப்பினருக்கும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

மேற்படி நீதிமன்றங்களின் தீர்ப்பு இவ்வாறாக அமையும்போது, அதில் இருந்து நாம் அனுமானிக்கக்கூடிய ஒரு விடயம், அடிப்படை மனித உரிமையை மீறும் வகையில் பொலிஸார் மனுத் தாக்கல் செய்துள்ளனர் என்பதுதான்.

ஆம், அடிப்படை மனித உரிமையை மீறும் வகையில் பொதுமகன் ஒருவர் மனுத்தாக்கல் செய்திருந்தால், அது அறியாமையின் பாற்பட்டதென்றோ அன்றி காழ்ப்புணர்வின் பிரதிபலிப்பென்றோ கருதிக் கொள்ளலாம்.

ஆனால் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டி பொலிஸார் அதனை மீறும் வகையில் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தனர் எனில், அவர்கள் இனவாத சிந்தையுடன் செயற்படுகின்றனர் என்பதும் தமிழ் மக்களுக்கு எதிராக அவர்களின் செயற்பாடுகள் உள்ளன என்பதும் உணரப்படும்.

ஆக, அனைத்து மக்களையும் சமகண் கொண்டு பார்க்க வேண்டிய பொலிஸாரே இனவஞ்சிப்புடன் செயற்படுகின்றனர் எனும் போது, ஈழத் தமிழ் மக்களின் அவலம் எவ்வாறாக இருக்கும் என்பதை எவரும் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

# மிதப்பு பாலம் விபத்து தொடர்பில் உரிய விசாரணை நடத்த வேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

(கொழும்பு)

கிண்ணியாவில் இடம்பெற்ற மிதப்பு பாலம் விபத்து சம்பவம் தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

இதேவேளை, இந்த விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

கடந்த ஏப்ரல் 11ஆம் திகதி, நிமல் லன்சா அந்தப் பகுதியில் பாலத்தை அமைப்பதற்கான அடிக்கல்லை நாட்டிய போதும், அது தொடர்பான வேலைத்திட்டம் ஸ்தம்பிதமடைந்திருந்தது என்றும் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார். இந்நிலையில், அங்கு மக்கள் பயணிப்பதற்கான மிதப்பு பாலம் விபத்துக்குள்ளாகியுள்ளது என்றும், அந்த விபத்தில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு நிவாரணங்கள் மற்றும் இழப்பீடுகளை வழங்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (ம-3)

# உள்ளூராட்சி தேர்தலின் ஆயத்தப் பணிகளை ஆரம்பிக்க ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான ஆரம்ப அமைப்பு பணிகளை ஆரம்பிக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி, உரிய படிவங்கள் தயாரிக்கப்படல், அலுவலர் மற்றும் வாகனக் கணக்கெடுப்பு நடவடிக்கைகள், வாக்குச் சாவடிகளை ஆய்வு செய்தல், அவற்றின் குறைபாடுகள் கண்டறியப்பட்டு, மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தப் பணிகள் என்பன முன்னெடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாவட்ட, பிரதி மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்களுக்கும் அறிவிக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவடையவுள்ள நிலையில் அதற்கான மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான தேர்தலை நடத்த வேண்டியுள்ள நிலையில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** இலந்தைக்காடு, கணபதி ஆலை கொற்றாவத்தை, கொற்றாவத்தை, நாச்சிமார் கோவிலடி, பொலிகண்டி, நெடியகாடு, பொலிகண்டி ஐஸ் தொழிற்சாலை பொலிகண்டி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** பாலாவி, பொன்னாவெளி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** முகத்தான் குளம் முதலாவது பண்ணை, கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## புதிய அரசியலமைப்பு வரைபை பாராளுமன்றில் சமர்ப்பிப்போம்

### பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு வரைபு பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட நிறுவனங்களின் செலவின தலைப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

புதிய அரசியலமைப்பு வரைபு தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அதில் எவ்வித இரகசியமான விடயங்களும் இல்லை எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார். (ம-3)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை-2021

**"நாகரிகத்தின் வேர் காடுகள்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது." - இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)**

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

'மீன் பிடிப்பதற்காகக் குளத்தில் வலைவீசுகிறார்கள். சில மீன்கள் திறமையானவை. அவை ஒருபோதும் வலையில் மாட்டிக்கொள்வதில்லை. அவை நித்தியர்களுக்கு உதாரணம்.

ஆனால் பல மீன்கள் மாட்டிக் கொள்ளும். அவற்றுள் சில தப்பிக்க முயலும். இவை முமுட்சுக்களுக்கு எடுத்துக்காட்டு. ஆனால் முயல்கின்ற எல்லா மீன்களாலும் தப்பிக்க முடிவதில்லை.

ஏதோ இரண்டொன்று தடால்தடால் என்று வலைக்கு வெளியில் குதிக்கின்றன. அப்போது மீனவன், இதோ ஒரு பெரிய மீன் தப்பிவிட்டது" என்று கூச்சலிடுகிறான். ஆனால், வலையில் சிக்கிக்கொண்ட மீன்களுள் பெரும்பாலானவற்றால் தப்பிக்க முடிவதில்லை.

தப்பிக்க அவை முயற்சி செய்வதும் இல்லை. அதற்கு மாறாக வலையைக் கௌவிக்கொண்டு, தலையைச் சேற்றில் புதைத்தபடி நிம்மதியாக இருக்கும். இனி ஒரு பயமும் இல்லை, நாம் சுகமாக இருக்கிறோம்" என்று நினைத்துக் கொள்ளும். சற்றுநேரத்தில் மீனவன் வலையைக் கரைக்கு இழுக்கப் போகிறான் என்பது அவற்றிற்குத் தெரியாது. இவை பத்தர்களுக்கு உதாரணம்.

(தொடரும்)

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி I

22

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



(குறிப்பு- Iñupiaq என்பது எஸ்கிமோவரால் பேசப்படும் மொழி) அதாவது குறியீடு செய்வதற்கு போதுமான குறியீடுகள் இருக்க வில்லை.

மாணவர்கள் முதலில் பத்து கூடுதல் குறியீடுகளை உருவாக்குவதன் மூலம் இந்த பற்றாக் குறையை நிவர்த்தி செய்தனர். ஆனால் இவை நினைவில் கொள்வது கடினமாக இருந்தது.

எனவே 20 ஐ அடியாகக் கொண்ட குறியீட்டை உரு வாக்கி பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது. அவர்களின் ஆசிரியர் வில்லியம் பார்ட்லி அவர்களுக்கு வழிகாட்டியிருந்தார்.

இம்முறைமை அலஸ்கா ஐசுபியட் (Alaskan Iñupiat) மத்தியில் பரவியுள்ளது. மற்றும் கனடாவில் பயன் படுத்த கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.


இங்குள்ள உரு 15, 15A களில், கக்டோவிக் இலக்கங்களை 0 முதல் 19 வரை காட்டுகிறது. பெரிய எண்கள், இக் குறியீடுகளின் சேர்மானத்தில் உருவாக்கப்படுகின்றன:

இருபது என்பது ஒன்றுக்கான குறியீடு மற்றும் பூச்சியக் குறியீட்டின் மூலம் எழுதப்பட்டுள்ளது.

நாற்பது இரண்டுக்கான குறியீடு மற்றும் பூச்சியக் குறியீட்டின் மூலம் எழுதப் படுகின்றது.

ஒன்றுக்கான குறியீடு மற்றும் இரண்டு பூச்சியங்களால் நானூறும் எட்டு நூறு இரண்டுக்கான குறியீடு மற்றும் இரண்டு பூச்சியங்களால் குறிக்கப்படுவதோடு மற்றவையும் இவ்வாறே.


உரு 15A காக்டோவிக் எண்முறைமை (Kaktovik numerals)







உரு 15 காக்டோவிக் எண்முறைமை





**செரோகி எண்கள்** (Cherokee numerals) **(19 ஆம் நூற்றாண்டு)**

செரோகி என்பது 1819 ஆம் ஆண்டில் சீக்வோயா (Sequoyah) என்பவரால் வடிவமைக்கப்பட்ட ஒரு தனித்துவமான எழுதும் முறையாகும். இது எழுதப்பட்டது ஈராகுவோ மொழியில் ஆகும். இம் மொழி பேசுவோர் சுமார் 20,000 பேர் இருக்கின்றனர்.

செரோகி எண்கள் இந்து-அரபு, அல்லது மேற்கத்திய எண் அமைப்புகள் போன்றதல்ல. அதாவது, இடப்பெறு மானம் மற்றும் பூச்சியத்திற்கு பதிலாக, ஒவ்வொரு தசாப்தத்திற்கும் அலகுக்கும் தனித்தனி குறியீடுகள் உள்ளன. அவை ஒன்றிணைகின்றன. உதாரணமாக 67 ஐ கருதுவோமானால் அது எழுதும் முறை 60 மற்றும் 7ஐ எழுதுவதாகும். இம்முறைமை உரு 16 இல் காட்டப்பட்டுள்ளதோடு உதாரணங்களும் தரப்பட்டுள்ளன.

உரு16 செரோகி எண்கள் (Cherokee numerals) (19ம் நூற்றாண்டு)




**அரிச்சுவடிகளில் (alphabet) உள்ள எழுத்துக்களை எண்களாகக் கொண்ட எண் முறைமைகள்.**

(அகரவரிசை எண் அமைப்புகள்- Alphabetic numeral systems) அப்ஜாத் எண்கள் (Abjad numerals), ஆர்மீனிய எண்கள் (Armenian numerals), அர்ஜபாட் எண் (Aryabhata numeration), காப்டிக் எண்கள் (Coptic numerals), சிரிலிக் எண்கள் (Cyrillic numerals), எதியோபிக் எண்கள் (Ethiopic numerals), கிளாகோலிடிக் எண்கள் (Glagolitic numerals), ஜோர்ஜிய எண்கள் (Georgian numerals), கோதிக் எண்கள் (Gothic numerals), கிரேக்க எண்கள் (Greek alphabetic), ஹீப்ரு எண்கள் (Hebrew numerals), உரோமன் எண்கள் (Roman numerals), சிரியாக் அகரவரிசை எண்கள் (Syriac alphabetic numerals) போன்ற எண் முறைமைகள் (அமைப்புக்கள்) அகரவரிசை எண் அமைப்புகளை உடையனவாகும்.

இவை எல்லாவற்றையும் பற்றி ஆராய்வது இலகுவான காரியமல்ல. ஒரு சில முறைகள் பற்றி இங்கு அலசப்படுகிறது.

**அப்ஜாத் எண்கள்** (Abjad numerals) **(8 ஆம் நூற்றாண்டு).**

அப்சாத் எண்கள் (அல்லது ஹிசாப் அல்-ஜும் மால்) ஒரு தசம அகர வரிசை எண். அமைப்பு / எண்ணெழுத்து குறியீடு ஆகும். இதில் அரபு எழுத்துக்களின் 28 எழுத்துக்களுக்கும் எண் மதிப்புகள் ஒதுக்கப்பட்டன.

(தொடரும்)

## 24 பேர்...

டில் இதுவரையில் கோவிட்-19 தொற்றினால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14,182 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-03)

## சாவகச்சேரி...

கச்சாய் வீதி சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 38வயதான சி.சிவபாலன் என்பவரே வாள்வெட்டுக்கு இலக்காகி கைவிரல் துண்டாடப்பட்டதுடன், தோள்பட்டை, வயிறு, கைப் பகுதிகளிலும் வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ம-03,30)

## மட்டுவிலில்...

அத்தோடு உயிருடன் புதைக்கப்படவிருந்த குழந்தையை மீட்டெடுத்த அயலவர்கள் பொலிஸாரின் உதவியுடன் குழந்தையை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். சம்பவம் தொடர்பில் தெரியவருகையில்,

மட்டுவில் முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அண்மித்த பகுதியில் 18 வயதுடைய இளம் பெண் ஒருவருக்கு பிறந்ததாக கருதப்படும் பச்சிளம் குழந்தையை நிலத்தில் புதைப்பதற்கு குறித்த பெண்ணும் அவருடைய தாயாரும் முயன்றனர்.

18 வயதான யுவதி நேற்று அதிகாலை குழந்தையைப் பிரசவித்துள்ளார்.

குறித்த யுவதி திருமணத்தின் முன்னரே குழந்தை பிரசவித்ததால், அதனை புதைக்க முற்பட்டதாக கூறப்படுகிறது.

இதன்போது குழந்தை அழுததால் அயலவர்கள் அங்கு விரைந்து அசம்பாவிதத்தை தடுத்து நிறுத்தியதுடன் குழந்தையை காப்பாற்றியுள்ளனர்.

மேலும் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் இப்பாதகச் செயலை செய்ய முயன்ற இரு பெண்களையும் பொலிஸார் கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ம-03,18,30,33,60,104)

## நினைவேந்தலை...

னர்.

இதனை விசாரித்த ஊர்காவற்றுறை நீதவான் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். மேலும் நேற்று முன்தினம் பருத்தித்துறை, மல்லாகம், சாவகச்சேரி ஆகிய நீதிமன்றங்களும் நினைவேந்தலை தடுக்கமுடியாது என தீர்ப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (ம-03,18,33)

## வடக்கில்...

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு வங்கக் கடலில் நிலவும் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி அடுத்த 24 மணி நேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக உருவாகலாம் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. (ம-03)

## கிண்ணியாவில்...

குறிஞ்சாக்கேணி பகுதியில் நேற்று காலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் குறித்த சம்பவத்தில் பலர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று காலை வழமைபோன்று மாணவர்கள் உட்பட பெற்றோர்கள் உள்ளடங்கலாக பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோதே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது. சம்பவ நேரத்தில் குறித்த மிதப்புப் பாலத்தில் 17 பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட 23 பேர் பயணித்துள்ளதுடன் நீரில் மூழ்கிய சிலர் நீந்தி கரையைச் சேர்ந்துள்ளனர் .

குறித்த பகுதியில், பழைய பாலத்திற்குப் பதிலாக, களப்பு பகுதியில் புதிய பாலமொன்று நிர்மாணிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக, பீப்பாய்கள் மற்றும் பலகை என்பனவற்றைப் பயன்படுத்தி குறித்த மிதப்புப்பாலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த மிதப்பு பாலத்தின் இரு பகுதிகளும் கம்பிகளின் ஆதாரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் உட்பட பிரதேச மக்கள் தமது அன்றாட பயண நடவடிக்கைகளுக்கு குறித்த மிதப்பு பாலத்தைப் பயன்படுத்துகின்றனர்.

விபத்தில் 8 மாணவர்கள், ஆசிரியை ஒருவர் மற்றும் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளனர். (ம-03)

## கிண்ணியா விப...

டின் சட்டத்திற்கு அமைய இது கொலை.

ஆகவே இந்த மரணங்களை நாம் கொலையாகவே கருதுகின்றோம், இதனுடன் தொடர்புபட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிப்போம் என ஆளுந்தரப்பு பிரதம கொரடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி, பிரதமரின் அமைச்சுக்களின் செலவீனத்தலைப்புக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார். (ம-03)

## புதிய அரசியல...

த.சித்தார்த்தன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கூட்டமைப்பின் சார்பில் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

காலித் கியாரியுடன், இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கரும் சந்திப்பில் கலந்து கொண்டார்.

13ஆவது திருத்தத்தை மேலும் பலப்படுத்துவது, புதிய அரசியலமைப்பு, ஒரேநாடு ஒரேசட்ட செயலணி குறித்து, கூட்டமைப்பின் அபிப்பிராயங்களை காலித் கியாரி கேட்டறிந்து கொண்டார்.

புதிய அரசியலமைப்பை கோட்டா அரசு உருவாக்குமென்ற நம்பிக்கை தமக்கில்லாத போதும், அதற்கு தொடர்ந்து முயற்சி செய்து வருவதாக கூட்டமைப்பு தெரிவித்தது.

காணி அபகரிப்பு, நினைவஞ்சலி உரிமை மறுப்பு, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான கைதுகள், சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பற்றியும் கூட்டமைப்பு விளக்கியது.

இலங்கையில் நடக்கும் அனைத்து விவகாரங்களும் அன்றாடம் ஐ.நாவினால் அறியப்பட்டு வருவதாகவும் கூட்டமைப்பு சுட்டிக்காட்டிய விவகாரங்கள் ஐ.நாவின் கவலைக்குரிய பட்டியலில் உள்ளதாகவும் காலித் கியாரி சுட்டிக்காட்டினார்.

இந்த விவகாரங்கள் குறித்து அரசதரப்புடன் தான் பேச்சு நடத்துவேன் என்றும் தெரிவித்தார். (ம-03)

## மின்கு...

ஒளிரவிடச் சென்றவேளை மோட்டார்சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி அன்றிரவே அவர் உயிரிழந்துள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-03)

## கிளி. கௌதாரி...

ரணைகளின் பின்னர் சடலம் பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ம-03,18,33,100,104,316)

## தீயில் எரிந்த...

குளம் பகுதியைச் சேர்ந்த சித்திரசீலன் - டிலோஜினி (வயது - 23) என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பப் பெண் கடந்த 14 ஆம் திகதி தனக்கு தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டி எரிந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அவர் உயிரிழந்துள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ். போதனை வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-03)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

### மெகா பவர்

திகதி 23/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0943
வெற்றி எழுத்து V | சுப்பர் இலக்க 20 | வெற்றி இலக்கங்கள் 16 17 45 80

### சுபிரி வாசனா

சீட்டிழுப்பு திகதி 2021/11/23 | சீட்டிழுப்பு இலக்கம் 1637
சுப்பர் இலக்கம் 15 | வெற்றி இலக்கங்கள் 10 28 30 35
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

### மஹஜன சம்பத

திகதி 2021/11/23
சீட்டிழுப்பு இலக்கம் 4595
ஆங்கில எழுத்து W | வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 7 8 4 0 0
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 23.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2890
ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கங்கள் 32 39 41 69
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2021.11.23
சீட்டிழுப்பு இலக்கம் - 625
M 18 25 27 74
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324 உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

விற்பனையாளர்கள் தேவை
தேசிய அபிவிருத்தி லொத்தர் ரிக்கட்டுக்களான
❖ மஹஜன சம்பத ❖ ராசி அதிர்ஷ்டம்
மேலும் பல லொத்தர் ரிக்கட்டுக்களை லொத்தர் கூடுகளில் விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை.
தொடர்பு (யாழ்ப்பாணம்)
(8760)
077 603 1723
077 666 8125

### அத கோடிபதி ADA KOTIPATHI

கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1398
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 23.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 5,307,040
வெற்றி இலக்கங்கள் 01 14 35 48 | ஆங்கில எழுத்து X
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா Shanida

கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 3733
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 23.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 3,534,360
வெற்றி இலக்கங்கள் 08 42 53 58 | ஆங்கில எழுத்து Q
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ஜயோதய

சீட்டிழுப்பு வாரம்: 769
வர்ணம்: இளஞ்சிவப்பு
திகதி: 23. 11. 2021 செவ்வாய்க்கிழமை
F 06 18 46 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,907,655/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

### ராசி அதிர்ஷ்டம்

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/=
திகதி 23.11.2021
வெற்றி வாரம் 3284
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 20 23 24 58 | மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,521,180/=
அபிவிருத்தி லொத்தர் சபை

### SUPER BALL சுப்பர் போல்

சீட்டிழுப்பு வாரம் 1572 | நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 23.11.2021 | தினம் செவ்வாய்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் F 35 52 63 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 71,407,868/=
அபிவிருத்தி லொத்தர் சபை தொலைபேசி: 0112 333 546-47

# A/L தமிழ்ப் பாடப் பெறுபேற்றில் மீண்டும் சாதனை - 2020

## பாராட்டி வாழ்த்துகின்றேன்

# பா.பத்மநாதன்

**B.A (Hons) (Tamil Spl.) - 1st Class,**
**M.A (Tamil) - 1st Class, M.Ed (Hons) - 1st Class, Dip.in Ed.**

இம்முறையும் என்னிடம் கல்வி கற்றுத் தமிழ்ப் பாடத்தில் அதிகளவான A தரச் சித்திகளையும் சிறந்த பெறுபேறுகளையும் பெற்ற மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

| | மாணவர் பெயர் | பெறுபேறு | தமிழ்ப்பாட பெறுபேறு | மாவட்ட நிலை | கல்வி நிலையம் |
|---|---|---|---|---|---|
| 01. | சி.அனிஸ்ரிகா | 3A | A | 3 | சித்திவிநாயகர் |
| 02. | ஜீ.வினுஷியா | 3A | A | 26 | சித்திவிநாயகர் |
| 03. | பா.நிரஞ்சனா | 3A | A | 33 | சித்திவிநாயகர் |
| 04. | ந.விதுர்ஷிகா | 3A | A | 41 | C.C.A |
| 05. | ஜெ.பிரீத்திகா | 3A | A | 46 | C.C.A |
| 06. | சு.தேனுஜா | 3A | A | 50 | சித்திவிநாயகர் |
| 07. | க.கோஷிகா | 3A | A | 55 | C.C.A |
| 08. | க.துர்ஷிகா | 3A | A | 62 | C.C.A |
| 09. | க.நிஷானி | 3A | A | 76 | மகுடம் |
| 10. | வி.திஷாஜினி | 3A | A | 143 | C.C.A |
| 11. | ர.சஜீவினி | 2AB | A | 32 | C.C.A |
| 12. | சி.பிரதீபா | 2AB | A | 35 | சித்திவிநாயகர் |
| 13. | ச.சஞ்சீவன் | 2AB | A | 44 | C.C.A |
| 14. | அ.விதுஜா | 2AB | A | 54 | C.C.A |
| 15. | கு.ஆரணி | 2AB | A | 60 | மொடேண் |
| 16. | ச.வேணுமிதா | 2AB | A | 67 | C.C.A |
| 17. | சி.பிரஷாந்தி | 2AB | A | 70 | மொடேண் |
| 18. | உ.அபிதா | 2AB | A | 79 | C.C.A |
| 19. | சி.லக்சிகா | 2AB | A | 88 | C.C.A |
| 20. | ஸ்ரீதமிழ்விழி (கிளி) | 2AC | A | 89 | மகுடம் |
| 21. | ச.பவித்திரா | 2AB | A | 98 | C.C.A |
| 22. | உ.பிரியங்கா | 2AB | A | 106 | சித்திவிநாயகர் |
| 23. | இ.திவ்வியா | A2B | A | 120 | மகுடம் |
| 24. | சி.சிவப்பிரியா | 2AB | A | 123 | C.C.A |
| 25. | நி.கலைவாணி | 2AB | A | 124 | C.C.A |
| 26. | த.அஜந்தன் | A2B | A | 125 | C.C.A |
| 27. | பா.கௌதமி | 2AC | A | 148 | C.C.A |
| 28. | ச.சசிகலா | 2AB | A | 168 | மொடேண் |
| 29. | அ.குயின்சிகா | ABC | A | 173 | சித்திவிநாயகர் |
| 30. | தெ.வினோஜா | 2AB | A | 177 | சித்திவிநாயகர் |
| 31. | செ.யுவன்யா | 2AB | A | 192 | சித்திவிநாயகர் |
| 32. | பே.கம்சத்வனி | 2AB | A | 195 | சித்திவிநாயகர் |
| 33. | ச.துஷானி | A2B | A | 207 | C.C.A |
| 34. | ச.துஸ்மிகா | 2AC | A | 216 | மொடேண் |
| 35. | கு.கஜானி | 2AC | A | 225 | C.C.A |
| 36. | அ.அபிநயா | 2AB | A | 227 | C.C.A |
| 37. | க.யனோசிகா | 2AB | A | 236 | C.C.A |
| 38. | இ.மதிஸ்ரா | ABC | A | 247 | சித்திவிநாயகர் |
| 39. | வி.கயல்விழி | ABC | A | 273 | C.C.A |
| 40. | மோ.பிரிந்தா | 2AC | A | 283 | C.C.A |
| 41. | கு.கஜாலினி | 2AC | A | 312 | C.C.A |
| 42. | ம.கபிஷா | 2AC | A | 317 | C.C.A |
| 43. | க.பௌனிகா | ABC | A | 343 | C.C.A |
| 44. | ஜெ.ரணுஜியா | A2C | A | 377 | சித்திவிநாயகர் |
| 45. | வி.கஜானி | 2AC | A | 386 | C.C.A |
| 46. | ஜி.சோமிக்கா | ABC | A | 401 | சித்திவிநாயகர் |
| 47. | ஜொ.நவிஷா | ABC | A | 443 | C.C.A |
| 48. | ம.சஞ்சிதா | ABS | A | 490 | C.C.A |
| 49. | இ.கஜீபா | A2C | A | 519 | C.C.A |
| 50. | ச.கௌசிகா | A2C | A | 591 | C.C.A |
| 51. | வ.கஜன்சிகா | ABS | A | 602 | மொடேண் |
| 52. | மு.லிதுர்சிகா | ACS | A | 728 | C.C.A |
| 53. | யூ.கெமல்ரீனா | ACS | A | 753 | சித்திவிநாயகர் |
| 54. | அ.கஜிதா | ASF | A | - | C.C.A |
| 55. | றொ.றெஜினோல்ட் | A2B | B | 95 | மொடேண் |
| 56. | வே.தனலக்ஷி | 2AB | B | 100 | C.C.A |
| 57. | லோ.திவ்யா | A2B | B | 150 | சித்திவிநாயகர் |
| 58. | தி.பானுஷா | 3B | B | 155 | மொடேண் |
| 59. | யோ.டொறின்டன்சினி | 3B | B | 184 | மொடேண் |
| 60. | பா.பகீர்தா | 2AB | B | 238 | C.C.A |
| 61. | அ.சஞ்சுவான் | 2AB | B | 269 | C.C.A |
| 62. | ம.டிலைக்ஸ்சனா | 3B | B | 276 | மொடேண் |
| 63. | வ.நிறையினி | ABC | B | 282 | சித்திவிநாயகர் |
| 64. | க.கஜீந்தினி | ABC | B | 291 | C.C.A |
| 65. | சி.சஞ்சீப் | A2B | B | 298 | C.C.A |
| 66. | பு.நிலக்ஸ்ஷனா | 3B | B | 318 | சித்திவிநாயகர் |
| 67. | ப.தனுஷியா | 3B | B | 330 | C.C.A |
| 68. | சு.சுவேதிகன் | 2BC | B | 396 | மொடேண் |
| 69. | நி.கிருஷ்ணிகா | ABC | B | 403 | C.C.A |
| 70. | த.வைஷ்ணவி | ABC | B | 423 | C.C.A |
| 71. | செ.கஜானன் | A2B | B | 436 | மொடேண் |

ஆசிரியரின் வகுப்புக்கள் நடைபெறும் கல்வி நிறுவனங்கள்:-

**C.C.A** - சுன்னாகம் | **சித்திவிநாயகர்** - மல்லாகம்

**மொடேண்** - சண்டிலிப்பாய் (8744) | **மகுடம்** - உரும்பிராய்


# தென்மராட்சியில் வெடிபொருட்கள் படையினரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தென்மராட்சி கொடிகாமம் பிரதேசத்திற்கு உட்பட்ட வேம்பிராய் பகுதியில் பெருமளவு வெடிபொருட்கள் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

வேம்பிராய் பகுதியில் தனியார் காணி ஒன்றில் காணப்பட்ட குறித்த வெடிபொருட்களை அவதானித்த காணி உரிமையாளர் பொலிஸார் ஊடாக இராணுவத்தினருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து அங்கு சென்ற சிறப்பு அதிரடிப் படையினரும் இராணுவத்தினரும் இணைந்து குறித்த வெடிபொருட்களை மீட்டுள்ளனர். (ம-3,30,60,104)

# கோப்பாயில் விபத்து; வயோதிபர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்தவர் கோப்பாய் மத்தியைச் சேர்ந்த 63 வயதுடைய சின்னத்தம்பி குணராசா என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வீதியில் பயணித்த டிப்பர் வாகனம் நாவற்குழி பகுதிக்கு திரும்பியபோது துவிச்சக்கர வண்டியில் பயணித்துகொண்டிருந்த முதியவர் மீது வாகனம் மோதியதில் முதியவர் படுகாயம் அடைந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,33)

# கொரோனா +740

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 740 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது.

இதனையடுத்து கோவிட் தொற்று உறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 558,860ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 2 இல் செவ்வாய் உள்ள நற்குணமுள்ள உயர் வருமானம் பெறும் 31 வயதான மணமகனுக்கு மணமகள் தேவை.
சீதனம் விரும்பப்படவில்லை. (8734)
075 169 7285

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**
**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3014)
0768226240 DHL

## வேலையாட்கள் தேவை

பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கு அருகாமையில் இயங்கிவரும் **சன் கலர்லாப் அன் பிறிண்டிங்** நிறுவனத்திற்கு டிசைனிங் மற்றும் பிறேம்கள் தயாரிப்பதற்கு வேலையாட்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் அல்லது பழக ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
( பயிற்சி அளிக்கப்படும் ) (C-3073)
077 727 5213

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623 (8746)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் (8759)
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். 076 825 7716 (ஆகாஸ்)

## புனித சூசையப்பர் சர்வதேச திருமண சேவை

மாரீசன்கூடல், இளவாலை.

றோமன் கத்தோலிக்க சகல சமூக மக்களுக்கான பதிவு செய்யப்பட்ட ஒரே இணையத்தளம்.
R.C. பெண் டாக்டர்கள் - 1982 - MD, 1990 - M.L.C
வெளிநாடு தேவை. 1997, உயரம் - 167 cm.
அழகிய மெல்லிய தோற்றம், கல்வி - A/L, Diploma in English,
R.C ஆண் அமெரிக்க P.R கணக்காளர் 1991
பட்டதாரிப் பெண் தேவை.
வெளிநாட்டில் P.R உள்ள R.C மணப்பெண்கள் தேவை.
எமது சேவை புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு வரை செயற்படுகிறது. (8752)
077 967 2462 | 070 310 7250

## வேலை வாய்ப்பு

யாழ். வை.எம்.சீ. ஏ நிறுவனத்திற்கு வரவேற்பு கடமையாளராக ஆண் விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. விண்ணப்பங்களை 01.12.2021 இற்கு முன்னதாக பொதுச் செயலாளர், வை.எம்.சீ.ஏ, இல.109, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
பொதுச் செயலாளர் (8750)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.